Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், சுபகிருது சித்திரை 3 ஆம் நாள் துல்கஃதா 10 (16-4-62) திங்கட்கிழமை இதழ் 64




யாழ்ப்பாணத்துக்கு

# இன்று எஸ். ஜே. வி. விஜயம்

## தமிழரசு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடுகள்

### மட்டக்களப்புக்கு திரு. அமிர்தலிங்கம் செல்லுகிறார்.

யாழ்ப்பாணம், திங்கள்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை 17-ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியிலே தமிழரசுக் கட்சி ஆதரவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவரும், டாக்டர் நாகநாதனும் கலந்து கொள்வார்கள்.

மன்னாரில் நடைபெறும் பொதுக்கூட்டத்துக்கு திருவாளர்கள் வி. என். நவரத்தினம், எஸ். கதிரவேற்பிள்ளையும் இன்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் செல்லுகின்றனர். வட்டுக்கோட்டை மெம்பர் திரு. அமிர்தலிங்கமும், உடுவில் மெம்பர் திரு. தர்மலிங்கமும் இன்று மட்டக்களப்புக்குப் புறப்பட்டுச் செல்வதாகத் தெரிகிறது.

## யாழ்ப்பாண மேயரும் நம்பிக்கையில்லாபிரேரணையும்

### மாநகரசபை அங்கத்தினர் தெரிவிக்கும் விபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

"அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்றியும் உத்தியோகத்தரது ஒத்துழைப்பின்றியும் நகர நிர்வாகம் சரிவர நடைபெறுது. இந்த உண்மையை உணர்ந்து மேயரவர்கள் தாமாக விலகல் வேண்டும். அல்லது எல்லோரும் கூடி ஆராய்ந்து ஒற்றுமைப்படல் வேண்டும். இல்லாவிடில் அவரைப் பதவி நீக்கம்செய்து நகர பரிபாலனம் செவ்வனே நடைபெற ஆவன செய்தலே சரியென்பது எனது அபிப்பிராயம்."

இவ்வாறு யாழ்ப்பாண நகர சபையின் 13-ம் வட்டார அங்கத்தவரான திரு. சோ. இராசரத்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. இராசரத்தினம் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இவ்வருடம் பெப்ரவரி 19-ம் திகதி நடைபெற்ற மேயர் தெரிவில் நான் எதுவித பங்கும் கொள்ளாததற்குக் காரணம் ஒப்பந்தம் செய்வதால் நகர ஆட்சி பாதிக்கப்படுமென்பது எனது திடமான கொள்கையாக இருந்ததே. மேயர் தெரிவும்மக்களால் செய்யப்படுவதற்கு சட்டம் வகுக்க ஆவன செய்யவேண்டுமென்றும் நான் அன்று தெரிவித்தேன்.

புதிய மேயர் பெப்ரவரி 20-ம் திகதி காலை தமது காரியாலயத்துக்கு 9 மணிக்குக் கடமையாற்ற வந்தபோது தமது ஆதரவாளர்கள் சிலருடன் அங்கு வந்தார். மற்ற அங்கத்தவர்களோடு தொடர்பு கொள்ளாது சில வேலைகள் நடந்தேறின. பகல் 1 மணிக்குள் பல உத்தியோக மாற்றங்களும் வேலை நீக்கங்களும் சில புது நியமனங்களும் நடைபெற்றன.

அன்று பிற்பகல் பெரியகடைச் சந்தை, மீன் சந்தை முதலியவற்றை இவர்கள் பார்வையிட்டுத் தங்களாலேயே சலுகைகள் வழங்கமுடியுமெனத் தெரிவித்தனர்.

பெப்ரவரி 22-ம் திகதியிலிருந்து எனது வட்டாரத்தில் நடைபெற்றுவந்த சில வேலைகள் நிறுத்தப்பட்டன. இதற்கு முன் உடனடியாக விசேஷ கூட்டம் கூடுமாறு கோரியிருந்தேன். ஆனால் விசேஷ கூட்டம் கூட்டப்படவில்லை.

அங்கத்தவர்கள் பலர் தங்கள் வட்டாரங்களில் தங்கள் விருப்பத்துக்கு மாறான பல

8-ம் பக்கம் பார்க்க

## மாஸ்கோவில் வானவெளி வீரர் தினம்

மாஸ்கோ, ஏப்ரல் 15

மாஸ்கோவில் நேற்று வானவெளி வீரர் தினம் கொண்டாடப்பட்டது. வானவெளி வீரர்களான ககாரின், டிட்டாவ் ஆகியோரும் பிரதமர் திரு. குருஷ்சேவும் இதில் கலந்துகொண்டனர். மேஜர் ககாரின் இவ் வைபவத்தில் பேசும்போது, பலரை ஏற்றிச்செல்லும் வானவெளிக் கப்பல் அமைக்கப்பட்டு வருவதாயும், சந்திரன், செவ்வாய் ஆகிய கிரகங்களுக்கும் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாயும் கூறினர். வருடாவருடம் ரஷ்யாவில் வானவெளி வீரர் தினம் இனிக் கொண்டாடப்படும்.

## டெஸ்ட் கிரிக்கெட்

கிங்ஸ்டன், ஏப்ரல் 15

மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்றுவரும் 5-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், மேற்கிந்தியக் கோஷ்டி தன் 2-ம் இன்னிங்ஸில் 6 விக்கெட் நஷ்டத்திற்கு 138 ரன்கள் எடுத்தது. முதல் இன்னிஸ்ஸில் மேற்கிந்தியக் கோஷ்டி 253 ரன்கள்எடுத்தது. இந்தியக் கோஷ்டி 178 ரன்கள் எடுத்துள்ளது.

∴ ∴ ∴

இந்தியாவுக்கும் ஈரானுக்கு மிடையே ஜயப்பூரில் நடைபெற்ற டேவிஸ்கப இரட்டை ஆட்டத்தில் 6—3, 6—2, 6—2 புள்ளிகளால் இந்தியா வெற்றி பெற்றது. முதல் நாள் நடைபெற்ற இரு ஒற்றையர் ஆட்டத்திலும் இந்தியா வென்றது.

## ஜீன்சிம்மன்ஸ் லண்டன் புறப்பட்டார்

கொழும்பு, ஞாயிறு

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஹாலிவூட் நடிகை ஜீன்சிம்மன்ஸ் எதிர்பாராத விதமாகக் கடந்த வெள்ளிக்கிழமை லண்டனுக்கு பயணமானர். அவசர வேலை காரணமாக உடன் லண்டனுக்கு வரும்படி அவரது கணவர். திரு. புறூக்ஸிக்குக் கிடைத்த ஒரு தந்தியை முன்னிட்டு அவர்கள் லண்டன் பயணமானர்கள்.

டைரக்டரும் கதாசிரியரும், சினிமா நடிகை ஜீன்சிம்மன்ஸின் கணவருமான திரு. றிச்சார்ட் புறூக்ஸ் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கையில், இலங்கையில் தமது படமான 'லோட்ஜிம்'மைத் தயாரிக்க போதிய இடவசதியுண்டென்றும், இலங்கை ஓர் அழகான நாடென்றும், இங்கு தமது படத்தைத் தயாரிப்பது குறித்து முடிவாக எதுவும் தீர்மானிக்கவில்லை யென்றும் கூறினர்.

## இன்று கூடும் இந்திய பார்லிமெண்ட் முதல் கூட்டம்

### சுகவீனமுற்ற பிரதமர் நேரு கலந்து கொள்வார்

புதுடில்லி, ஏப்ரல் 15

நாளை நடைபெறும் இந்தியப் பார்லிமெண்டின் முதலாவது கூட்டத்தில், பிரதம மந்திரி நேரு பங்கெடுத்துக்கொள்வார். நேருவின் மந்திரிசபையில் 17 காபினட் மந்திரிகளும், 10 ராஜாங்க மந்திரிகளும், 11 துணை மந்திரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்பு அறிவிக்கப்பட்ட 6 ராஜாங்க மந்திரிகளுடன், மேலும் 4 மந்திரிகள் நியமனம் அறிவிக்கப்பட்டது. திரு. பி. என். தத்தார், திரு. ஜயசுக்லால் ஹாத்தி, ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன், திரு. கே. ரகுராமையா ஆகியோரே அவர்கள்.

வட வியட்னும் பிரதமர் புதிய மந்திரிசபையை அமைத்ததுகுறித்து திரு. நேருவுக்குப் பாராட்டு அனுப்பியுள்ளார்.

## வாயினுள் பொருந்தும் ஒலிபரப்பி

வாஷிங்டன், ஏப்ரல் 15

வாயினுள் பொய்ப்பல் போன்று பொருத்தும் சிறிய ஒலிபரப்பி ஒன்றை அமெரிக்க வர்த்தகக்கம்பெனி ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. இரு வரிசைப் பற்களையும் ஒன்றுடனென்று தட்டுவதின் மூலம் செய்திகளை ஒலிபரப்ப முடியும் என அறிவிக்கப்படுகிறது.

## பாக். நிதிமந்திரி ராஜினுமா

கராச்சி, ஏப்ரல் 15

பாகிஸ்தான் நிதிமந்திரி திரு. முகம்மது இப்ராஹிம் சுகவீனம் காரணமாக ராஜினுமாச் செய்துவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர்கள் இலவசமாக கற்பிக்கிறார்கள் !

### எருதிடல் பள்ளிக்கூட விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணக்குடாநாட்டைச் சேர்ந்த எருதிடல் குடியேற்றப்பகுதியில், அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களே, தங்கள் சொந்த முயற்சியால் ஒரு பள்ளிக்கூடம் கட்டி நடத்துகின்றார்கள். அதில் 130 மாணவர்கள் படிக்கின்றனர். ஏழு ஆசிரியர்மார்கள் ஊதியம் எதுவும்பெறுமல்சமூகசேவையாகப் படிப்பித்துவருவது குறிப்பிடத்தக்கது.

அப்பள்ளிக்கூடவிழா நேற்று திரு. வி. என். நவரத்தினம் தலைமையில்நடைபெற்றது. பல மாணவர்கள் பலவித ஆடல் பாடல்களை நல்லமுறையில் நடத்திக்காட்டியபின் தலைவர், அவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டினர். அப்பள்ளிக்கூடத்துக்கு அரசாங்க அங்கீகாரம் கிடைக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர்.

திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பின்னர் பேசுகையில், தொழிற்கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினர். எதிர்காலத்தில் தொழிற் கல்விதான் பயன் தருமென்றும், அரசாங்க உத்தியோகத்தை நம்பிப் படிப்பதில் பயனில்லை என்றும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் முனையவேண்டுமென்றும் குறிப்பிட்டார். மூன்று ஆசிரியர்கள் பேசியபின் விழா இனிது முடிந்தது.

## யங்லயன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யங்லயன்ஸ் கோஷ்டிக்கும் சென்ஜோன்ஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கட்போட்டியில் யங்லயன்ஸ் கோஷ்டி 3 விக்கட்டுக்களாலும் மூன்று ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது.

யங்லயன்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த யோ. அல்பிரட் மிகத் திறமையாக விளையாடி 32 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆகாமலிருந்தார்.

## பெர்லின் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், ஏப்ரல் 15

நாளை பெர்லின் பிரச்சினை பற்றி வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும். அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க்கும், வாஷிங்டனிலுள்ள ரஷ்யத் தூதரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள்.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள கறுப்பு A 50 Cambridge விற்பனைக்குண்டு.

பார்வையிடம்:
48, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.


## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 3-ந்தேதி திங்கட்கிழமை (16-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா மாதம் 10ம் பிறை.

இன்று இரவு 1-04 வரை துவாதசி,பின்னர் திரயோதசி. இரவு 12-03வரை பூரம். பின்னர் உத்தரம். சித்தயோகம். இராகுகாலம் 7-34முதல் 9-04 வரையும்.

இத்தினத்தில் பயிர்த்தொழிலுக்காய முக்கிய ஆயத்தங்களையும், கருமங்களையும்கையாள்வது நலம். கால்நடைகள் கொள்ள, விற்க நலம். வர்த்தகத் துறையிலும் இன்று ஈடுபட விசேடமாகும்.

கைவிசேடம்: காலை 9.08 முதல்9-44வரை, பின்னர் இரவு 9-08முதல் 10-17வரை.

விருந்து: காலை 9-08முதல் 9-44வரை.

நண்பர், பெரியோர தரிசனத்திற்கு: காலை 9-08முதல் 9-44 வரை.

வித்தியாசாலை ஆரம்பிக்க: 9-08 முதல் 9-44வரை.

புதுக்கணக்கு வியாபாரம்: காலை 9-08 முதல் 9-44 வரை.

கிணறுதோண்ட, பிரயாணஞ் செய்ய, புதிதுண்ண, பொன்னுருக்க விசேடமான நேரம்:- இரவு 2-29 முதல் 3-00 மணி வரையும்.

இன்று உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்களுக்குப் படுபட்சியாதலால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

பூரம்—உத்தரம்: இன்று இவர்களுக்கு பணமுடை, எதிலும் தயக்கம், மனத்திடம், பகைநீக்கம், பிறர் மதிப்புஆதியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு தொழிலபிவிருத்தி, பணமுடைநீக்கம், நீசர்தொடர்பு, அவப்பொழுது, பிரயாணம் ஆதியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு காரியசித்தி, சுபசெய்தி, சமூக மதிப்பு, சிந்தனை, நல்லோர் எதிர்ப்பு ஆதியன காணப்படுசன்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு அசாத்திய சிந்தனை, சுபபிரயாணம், வித்தியாபிவிருத்தி, மதிப்பு, கடுமையான உழைப்பு, பயன் தாமதம், மனக்கவலை ஆதியன காணப்படுகின்றன.

கடகம்: (புனர்பூசம் நாலாம் பாதம், பூசம், ஆயிலியம்முடிய) இன்று இவர்களுக்குப் பயன் குறைவு, நல்லோர் நட்பு, செய்காரிய பலிதம், நீசர் இடர், தொழில் தாமதம், பணமுடக்கம் ஆதியன காணப்படுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்முடிய) இன்று இவர்களுக்கு வாக்கு வன்மை, புத்திசாதுர்யம், பகை நீக்கம், தயக்கம்,பணமுடக்கம், வரவு தாமதம், மனத்திடம் ஆதியன காணப்படுகின்றன.

கன்னி: (உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு பகை நீக்கம், மதிப்புயர்ச்சி, மாதா வழி உதவி,செம்காரியவெற்றி, ஊழியர் இடர் ஆதியனகாணப்படுகின்றன

துலாம்: (சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன் முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு காரியக்கேடு, நட்டம், வித்தை லாபம், தொழில்லாபம்,ஞாபக் மறதி, பொருட்கேடு ஆதியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம்அனுஷம்கேட்டைமுடிய) இன்று இவர்களுக்கு சோம்பல், நட்டம், சுப செய்தி, தொழில் நன்மை, பணவரவு, செய்தொழில் அலைச்சல் ஆதியல காணப்படுகின்றன.

தனு: (மூலம், பூராடம்,உத்தராடம முதற்பாதம் முடிய) இன்று இவர்களுக்கு வாக்குச் சாதுரியம், தொழில் மேன்மை;புதியன தடைப்படல், கடும் உழைப்பு, ஊழியர் நலம் ஆதியன காணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம் பின் முக்கால், திருவோணம்,அவிட்டம் முன்னரை முடிய) இவர்களுக்கு இன்று சுப முயற்சி தொடக்கம், வாக்கு வெற்றி, கல்விச் சிறப்பு, பிறரால் மதிப்புயர்ச்சி, தயக்கம், சந்தேகத்தால் தொழிற்கேடு ஆதியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு தைரியம், சுபசெய்தி,தேகநலம்,செய்காரியத்தடை, உடல்நலம் பாதித்தல்,உஷ்ணரோகம் ஆதியன காணப்படுகின்றன.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய) இன்று இவர்களுக்கு சுப கருமமுயற்சி, தொழில்வெற்றி, பணவரவு, நண்பருதவி, பெரியோர் நட்பு, சோம்பல் ஆதியன காணப்படுகின்றன.

# கராச்சிக்கு இரு கப்பல்களை போர்ச்சுக்கல் அனுப்புகிறது

## கோவாவிலிருந்து காவற்கைதிகளை வெளியேற்ற நடவடிக்கை

லிஸ்பன், ஏப். 15

கோவாவிலுள்ள போர்ச்சுக்கீசிய காவற் கைதிகளை வெளியேற்றுவதற்காக இம்மாதம் இரு கப்பல்களை போர்ச்சுக்கல் அனுப்புவதாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வீரா குருஸ்'என்ற முதல் கப்பல் இம்மாதம் 20-ம் திகதி லிஸ்பனிலிருந்து புறப்படுகிறது. 'பெட்ரியா' என்ற மற்றொரு கப்பல் மொஸாம்பிக்கிலுள்ள லூரன்கோ மார்கியுஸிலிருந்து இம்மாதம் 27-ம் திகதி புறப்படும்.

எஞ்சியிருக்கும் காவற் கைதிகளை ஏற்றிச் செல்வதற்காக மற்றும் இரு கப்பல்கள் கராச்சிக்குப் புறப்படும்.

காவற் கைதிகளை விமான மூலம் கோவாவிலிருந்து பம்பாய் மார்க்கமாக கராச்சிக்கு அனுப்புமாறும் அங்கிருந்து அவர்களை கப்பலில் தாயகத்துக்கு அழைத்துச் செல்வதாகவும் போர்ச்சுக்கல் இந்தியாவுக்கு யோசனை தெரிவித்திருந்ததாக ஆரம்பத்தில் போர்ச்சுக்கல் வெளிவிவகார இலாகா அறிவித்தது.

கோவாவில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் போர்ச்சுகல் சிவில் அதிகாரிகளையும் இராணுவ வீரர்களையும் போர்ச்சுகலுக்கு அனுப்பிவைக்குமாறு போர்ச்சுகல் அரசாங்கம் பாரத அரசாங்கத்தைக் கேட்டிருந்ததற்கு பாரத அரசாங்கம் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பாகுபாடு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்ல; நாட்டின் விவகாரங்களை சகஜ நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு மார்க்கமுமல்ல!

இதுபோன்ற தட்டிக்கழிக்கும் நடவடிக்கைகளால் இலங்கையின் ஒரு பகுதி மக்களுக்கு கொடுமை செய்வதனாலும், பாரபட்சமாக நடந்துகொள்வதனாலும் 'நாடற்றவர்' பிரச்னையிலிருந்து இலங்கை அரசாங்கம் விடுபடமுடியாது.

கல்விக் கமிஷனின் "மனிதத் தன்மையற்ற" சிபார்சுகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் ஆகியவைகளின் தலைவர்கள் கண்டித்துள்ள அதேசமயம், ஒரு குழந்தைக்கு அதன் தாய்மொழியில் கல்வியூட்டும் அடிப்படைக் கொள்கைக்கு ஒப்புக்கொள்வதால், சிங்களம் உத்தியோக மொழியென்ற நிலையை எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாது என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த மோசமான யோசனையை சிங்களவர்களே பகிரங்கமாகக் கண்டித்திருப்பதால் கல்விக் கமிஷனின் சிபார்சை சிறிதும் தாமதமின்றி அரசாங்கம் நிராகரித்துவிடுமென நம்புவோம்.





ஸல்லைக் கண்டதுமே முகங்கள் மலருகின்றன

குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூடத்தான் ஸல்லை ஆவலோடு எதிர்நோக்குகிறார்கள். ஸல்லுக்குள்ள பாலாடையின் அரும் சுவையும் தெவிட்டாத தித்திப்புமே இதற்குக் காரணம்! அதைத் தனிப் பால் பானமாகப் பருகி மகிழுங்கள் அல்லது டீயிலோ, கோப்பியிலோ, பாலுக்குப் பதில் சேர்த்துக்கொண்டு, அவற்றின் சுவையை அதிகரிக்கச் செய்யுங்கள். ஸல் உடன் கரைந்துவிடுகிறது.

ஸல்லைப் பாவிப்பதால் பணம் மிச்சமாகும். அதன் விலை சாதரண மோல்டட் பாலை விட அதிகமில்லை. மேலும் அது பால் மற்றும் சீனியின் செலவைக் குறைக்கும்! இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் சென்று உங்கள் குடும்பத்தாரின் முகங்கள் மலருவதைக் காணுங்கள்!

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

ஸல்—குடும்பத்தார் உடன் விரும்புவது

# பிரான்ஸின் புதியபிரதமர் நியமனம்

## மந்திரிசபை அமைப்பதில் திரு. பொம்பியூ சுறுசுறுப்பு

பாரிஸ், ஏப். 15

பிரான்ஸின் புதிய பிரதம மந்திரியாக திரு. ஜோர்ஜ் பொம்பியூவை ஜனாதிபதி டிகோல் நியமித்துள்ளார். திரு. பொம்பியூ புதிய மந்திரி சபை அமைப்பதில் ஈடுபட்டுள்ளார். திரு. பொம்பியூ இதுவரை பிரஞ்சுப் பார்லிமெண்டில் இருந்தவரல்ல; எந்த மந்திரி சபையிலும் பதவி வகித்தவருமல்ல. ஒரு வங்கி டைரக்டரான இவருக்கு வயது 50.

இதுவரை பிரதமர் பதவி வகித்த திரு. டெப்ரே தமது மந்திரி சபையுடன் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே புதிய மந்திரி சபை அமைக்கப்படுகிறது.

திரு. டெப்ரேயின் மந்திரி சபைதான தற்காலத்தில் நீண்ட காலம் பதவியிலிருந்த மந்திரி சபையாகும். இது 3 வருடமும் 95 நாட்களும் பதவியிலிருந்திருக்கிறது.

## நேபாளம் – இந்திய உறவு

### மன்னர் மகேந்திரர் கருத்து

காட்மாண்டு, ஏப். 15

"பாரதம் நேபாளத்தின் நேசநாடு. அண்டை நாடான நேபாளமும் பாரதமும் நல்லுறவுடன் வாழவேண்டும். பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவது இரு நாடுகளுக்கும் நல்லதல்ல" என்று மன்னர் மகேந்திரர் நேற்று இங்கு பஞ்சாயத்து தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மன்னர் மகேந்திரர் புதன் கிழமை புதுடில்லி வந்து சேரவிருக்கிறார். மகாராணியுடனும் வெளிவிவகார மந்திரியுடனும் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் மன்னர் இந்தியாவில் ஐந்து தினங்கள் தங்கியிருப்பார். பிரதமர் நேருவுடன் இந்திய – நேபாள உறவு குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## "தலைவர்களை விடுதலை செய்க!"

### கிழக்கு பாகிஸ்தான் தலைவர்கள் கோரிக்கை

டாக்கா, ஏப். 15

கிழக்கு பாகிஸ்தானில் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களையும் இளைஞர்களையும் விடுதலை செய்யும்படி கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த ஆறு பிரபல அரசியல் தலைவர்கள் பாகிஸ்தான் அரசாங்கத்தை ஒரு அறிக்கையில் வற்புறுத்தியுள்ளனர்.

பிரபல தலைவர்களையும் கல்லூரி மாணவர்களையும் விசாரணையின்றிச் காவலில் வைத்திருப்பது பெரிய அநீதி என்று அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

## கியூபா கைதிகள் 60 பேர் விடுதலை

வாஷிங்டன், ஏப்ரல் 15

கியூபா படையெடுப்பின் போது கைதுசெய்யப் பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் 60 பேர்களை கியூபா அரசாங்கம் நேற்று விடுதலை செய்தது. இவர்கள் அமெரிக்கா வந்து சேர்ந்தனர்.

## உத்தரபிரதேச கவர்னர்

புதுடில்லி, ஏப். 15

உத்தரபிரதேசகவர்னராகப் பணியாற்றிய டாக்டர் பி. ராமகிருஷ்ணராவ் தமது பதவிக் காலம் முடிவடைந்து நேற்று உத்தரபிரதேசத்திலிருந்து புறப்பட்டார்.

உத்தரபிரதேசத்தின் புதிய கவனராக நியமிக்கப்பட்டுள்ள திரு. விஸ்வநாததாஸ் நாளை பதவியேற்பார்.

## சுகாதார இலாகா மீது மந்திரி குறைபாடு

கொழும்பு, ஞாயிறு

தனிப்பட்டவர்களிடமிருந்தோ அல்லது சங்கங்களிடமிருந்தோ பெறப்படும் கடிதங்களுக்கு இரண்டு வாரங்களுக்குள் பதில் அனுப்பவேண்டும் என சுகாதார மந்திரி சுகாதார இலாகாவுக்கு அறிவித்துள்ளார்.

சுகாதார இலாகவுக்களுக்கோ அல்லது அதன் அதிகாரி அனுப்பும் கடிதங்களுக்கு எதுவித பதிலும் கிடைப்பதில்லை என தனிப்பட்டவர்களும் சங்கங்களும் தமக்கு புகார் செய்ததை தொடர்ந்தே தாம் இவ்வித நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதாக மந்திரி தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து சுகாதார டைரக்டர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்ன சுகாதார இலாகாவில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு ஒரு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளார். அவர்களின் அஜாக்கிரதையால் தான் இவ்வித நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## விளையாட்டுக் கழக நிர்வாகிகள் தெரிவு

காங்கேசந்துறை, வெள்ளி

காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் விடுதியில் அரசினர் வைத்தியசாலைக் கைப்பந்தாட்டக் கழக நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்னர்.

போஷகர். டாக்டர் திரு. மு. வேதாணியம், தலைவர். திரு. பொ. சிவஞான சுந்தரம், உப தலைவர். திரு. சு. இராமநாத பிள்ளை, செயலாளர். திரு. சி. தேவானந்த், உப-செயலாளர். திரு. சு. தர்மலிங்கம், பொருளாளர். திரு. க. சிவராசா, பரிசோதகர். திரு. த. பத்திநாதர். விளையாட்டுப் பகுதி தலைவர்கள். திருவாளர்கள். அ. பாலசுப்பிரமணியம், க. சிவராசா, இ. கந்தையா, ப. இராசதுரை, பெ. சின்னத்துரை.

திருவாளர்கள். ஆ. இராஜேந்திரம், இ. சின்னத்தம்பி ந. இராசதுரை, செ. தாமு, சி. வைத்திலிங்கம். ஆகியோரைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

# அமெரிக்க யோசனையை 'டச்' ஏற்றது

## மேற்கு இரியான் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### ஆம்ஸ்டர்டாமில் எதிர்க்கட்சி நடத்திய ஆர்ப்பாட்டம்

ஆம்ஸ்டர்டாம், ஏப். 15

மேற்கு இரியானுக்கு துருப்புக்களை அனுப்புவதற்கு ஆட்சேபம் தெரிவித்து நெதர்லண்ட்ஸின் எதிர்க்கட்சியான தொழிற் கட்சியினர் நேற்று ஆம்ஸ்டர்டாமில் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மேற்கு இரியான் சம்பந்தமாக நெதர்லன்ட்ஸ் அரசாங்கம் அனுஷ்டிக்கும் கொள்கையைக் கண்டிக்கும் சுலோகங்களைக்கொண்ட அட்டைகளை ஊர்வலத்தினர் தாங்கிக் கொண்டு சென்றனர்.

நெதர்லன்ட்ஸ் அரசாங்கத்தின் மேற்கு இரியான் கொள்கையைக் கண்டித்து நெதர்லன்ட்ஸ் சோஷலிஸ்ட் கட்சியும் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தியது.

### 'டச்' அரசாங்கம் ஏற்றுக்கொண்டது

மேற்கு இரியான் பிரச்னைக்குச் சமரசத் தீர்வுகாண்பதற்கு அமெரிக்கா கூறிய யோசனையை 'டச்' அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த யோசனையை இந்தோனேஷியா ஏற்கனவே ஏற்றுக்கொண்டது.

மேற்கு இரியான் நிர்வாகத்தை இரண்டு வருடங்களுக்கு ஐ. நா. வின் மேற்பார்வையில் ஒப்படைத்துவிட்டு மேற்கு இரியானிலுள்ள டச் துருப்புக்களையும் சிவில் அதிகாரிகளையும் டச் அரசாங்கம் படிப்படியாக வாபஸ்பெற வேண்டுமென்பதும் இக்காலத்தில் இந்தோனேஷியா தனது அதிகாரிகளை மேற்கு இரியானுக்கு அனுப்பி நிர்வாகத்தை படிப்படியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதும் பின்னர் வாக்குக் கணிப்பு நடைபெற வேண்டுமென்பதும்தான் அமெரிக்கா தெரிவித்த யோசனையாகும்.

'டச்' அரசாங்கமும் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டதால் இது சம்பந்தமான நடைமுறைகளைப்பற்றி முடிவுசெய்வதற்கு இந்தோனேஷிய-டச் அரசாங்கப் பிரதிநிதிகள் விரைவில் கூடி இரகசியமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்களென்று எதிபார்க்கப்படுகிறது.

## வீடு கட்ட மக்கள் வங்கியின் கடன் உதவி

கொழும்பு, சனி

ஒரு விண்ணப்பக்காரருக்கு கூடுதலான தொகையாக ரூ. 25,000 வீதம் கடனுதவி வழங்க மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது.

வீடுகட்டப்படவிருக்கும் நிலத்தின் பெறுமதியில் 75 சதவீதம் அதிகரிக்காத கடனுதவியையே மக்கள் வங்கி அளிக்கும்.

இந்த கடன் பணம் ஐந்து வருடங்களில் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். இதற்கு 7சதவீத வட்டி அறவிடப்படும்.

காணி ஈடுவைப்பது சம்பந்தமாகவும் மக்கள் வங்கி புதிய திட்டத்தை வகுக்க ஆலோசனை செய்து வருகிறது.

## யங்ஸ்டார் கழகம் வெற்றி

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை நியூ ராஜா விளையாட்டுக் கழகத்திற்கும் மாவிட்டபுரம் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் யங்ஸ்டார் கழகம் வெற்றியீட்டியது.

## சிரியாவில் ஊரடங்கு சட்டம் ரத்து

டமாஸ்கஸ், ஏப்ரல் 15

வடக்கு சிரியாவில் சமீபத்தில் ஏற்பட்ட கலகத்தைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று ரத்துச் செயப்பட்டது. மூடப்பட்டிருந்த எல்லைகளும் மீண்டும் திறக்கப்பட்டன.

இடைக்காலஅரசாங்கம்அமைப்பதற்கு தமக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக சிரியா அதிபர் தெரிவித்தார். விரைவில் புதிய மந்திரி சபையொன்றைத் தாம் நியமிக்கப் போவதாகவும் இந்த மந்திரி சபை புதிய அரசியல் சாசனம் ஒன்னற உருவாக்குமென்றும் அவர் அறிவித்தார். புதிய அரசியல் சாசனத்துக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு வாக்குக் கணிப்பு நடைபெறுவதற்கு இந்த மந்திரி சபை ஒழுங்கு செய்யும். சுயேச்சையான தேர்தல் நடைபெறவும் புதிய மந்திரி சபை ஏற்பாடு செய்யும்.

# நூறாண்டு வாழ்ந்த டாக்டர் விஸ்வேஸ்வரையா காலமானர்

## ராஜாங்க மரியாதையுடன் பூதவுடல் தகனம்

பங்களூர், ஏப். 15

நூறு வயதுக்குமேல் வாழ்ந்த பிரபல என்ஜினியரும் ராஜதந்திரியுமான டாக்டர் எம். விஸ்வேஸ்வர்ரயா நேற்றுக் காலை பங்களூரிலுள்ள தமது இல்லத்தில் காலமனர்.

டாக்டர் விஸ்வேஸ்வரையாவின் சொந்தக் கிராமமான உத்தனஹன்டி என்ற இடத்தில் அவரது பூதவுடல் முழு ராஜாங்க மரியாதைகளுடன் நேற்றிரவு தகனஞ் செய்யப்பட்டது.

மறைந்த பெரியாருக்கு சுமார் ஐந்து லட்சம் மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பிரேத ஊர்வலத்தில் மைசூர் முதன் மந்திரி திரு. எஸ் ஆர். கன்டியும் மற்றும் பிரமுகர்களும் பெருந்தொகையான மக்களும் கலந்துகொண்டனர்.

டாக்டர் விஸ்வேஸ்வரையாவின் மரணத்துக்கு ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத், உப ராஸ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், மைசூர் கவர்னர் ஜெயசாமராஜ உடையார், உத்தர பிரதேச முதன் மந்திரி, பீகார் முதன் மந்திரி ஆகியோர் அனுதாபந் தெரிவித்துள்ளனர்.

மைசூர் முதன் மந்திரிக்கு பிரதமர் நேரு அனுப்பியுள்ள ஒரு அனுதாபச் செய்தியில் டாக்டர் விஸ்வேஸ்வர்ரயாவின் மரணச் செய்தி கேட்டு பெருந் துயர் அடைந்ததாகத் தெரிவித்துள்ளார். "டாக்டர் விஸ்வேஸ்வரையா நிறைவு வாழ்வு வாழ்ந்த பெரியார். நம் நாட்டவர் ஒருவர் நெடு வாழ்வு வாழ்ந்து நாட்டுக்காகவே உழைத்தார் என்பதை நினைக்கும்போது நமக்குப் பெருமையாக இருக்கிறது" என்று பிரதமர் நேரு தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# அல்ஜீரிய ஐரோப்பியர் பொது வேலைநிறுத்தம்

## ஜோஹு மரணதண்டனைக்கு ஆட்சேபம்

அல்ஜியர்ஸ், ஏப்.15

அல்ஜீரிய விடுதலையை எதிர்க்கும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ராணுவ ஸ்தாபனமான 'ஓ. ஏ. எஸ்.' என்ற ஸ்தாபனத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மாஜி பிரஞ்சு ஜெனரல் ஜோஹுவுக்கு பாரிஸில் உயர்தர ராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்ததற்கு ஆட்சேபம் தெரிவித்து அல்ஜிரியாவிலுள்ள ஐரோப்பியர்கள் பொது வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளனர். அல்ஜியர்ஸ், ஓரான், கொன்ஸ்டன்டைன் ஆகிய இடங்களில் தண்ணீர் விநியோகம், மின்சாரம் போக்குவரத்து சேவைகள் தடைப்பட்டுள்ளன.

அல்ஜியர்ஸில் நேற்று நடைபெற்ற பலாத்கார சம்பவங்களில் நண்பகலுக்கிடையில் ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

ராணுவ உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து பிரெஞ்சு ஜனாதிபதி டிகோலுக்கு மனுச் செய்யும்படி கூறப்பட்ட யோசனையை மாஜி ஜெனரல் ஜோஹு நிராகரித்துவிட்டதால் அவரது வழக்கறிஞர்கள் அவரது சார்பில் ஜனாதிபதியிடம்கருணை மனு சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

### மணி வாக்கு

"ஒழுக்கமே ஆத்மீக வாழ்வுக்கு அடிப்படை. ஆகவே தெய்வத்தை அடைவதற்கு 'சித்தசுத்தி' அல்லது தூய உள்ளம் முதல் நிபந்தனையாகும்."

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 3 மீ உ (16-4-62)


# தேசிய தலைவராக விளங்கிய சேர் பொன். இராமநாதன்

## இன்று அவர் பிறந்தநாள்

**இலங்கையில் சிறந்த தேசியத் தலைவராக விளங்கிய சேர். பொன்னம்பலம் இராமநாதனின் பிறந்த நாள் இன்று அவரது சிறந்த வாழ்க்கையை ஓரளவு நினைவுகூர வைக்கிறது இக் கட்டுரை.**

பல்வேறு இனமக்கள்வாழும் எந்த நாட்டிலும் அந்நாட்டின் எல்லா வகுப்பினராலும் மதித்து போற்றக்கூடிய தேசிய தலைவர்கள் இந்த உலகத்திலேயே மிகச் சொற்பமாகும். தனது காலத்திலேயே தேசிய தலைவர் என்ற பெருமையைத் தேடிக்கொண்டவர்களில் யாழ்ப்பாணம்மா ஈந்தளித்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் முக்கியமானவர்.

'மிகச் சிறந்த செல்வாக்கும் புகழும் நிறைந்த அவர் தமது தலைமுறையில் அகில இலங்கைக்கும் மாபெரும் தலைவராகவும் மதிப்புள்ள வழிகாட்டியாகவும் இருந்தார். மனோ சக்தியும் அதிகாரத்துவமும், வாக்குச் சாதுரியமும் மிக்க சட்ட சபை அங்கத்தவராக அநேக வருடங்களிருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பிலாத நற்சேவைகளை ஆற்றினர்.

சேர். பொன்னம்பலம் இராநாதன் 1815-ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் திகதி இந்து தமிழ்க்குடும்பத்தில் பிறந்தாராலும் 80 வது வயதில் தமது மரணத்தை அடையும் கடைசி நிமிடம் வரை பெரும் இலங்கையராகவாழ்ந்து, துக்ககரமான 1915-ம் ஆண்டில் பல சிங்கள மக்களது நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் அயராது உழைத்து வெற்றி வீரனைத் திகழ்ந்தார்.

கொழும்பிலும் சென்னையிலும் கல்விபயின்ற இவர் கொழும்பில் உயர் நீதிமன்ற வழக்கறிஞரானர். இவரின் சட்ட நுணுக்கங்களைப் பாராட்டி, இங்கிலாந்து சட்ட வித்தியா பீடம் இவருக்கு பாரிஸ்டர் பட்டத்தை பரீட்சையின்றியே வழங்கிக்கௌரவித்தது.

### தமிழர் பிரதிநிதி

இராமநாதன் தமது 27வது வயதில் சேர் முத்துக்குமாரசாமிக்குப் பின் இலங்கைச் சட்ட சபையில் தமிழர் பிரதிநிதியாக நியமனம் பெற்றார். அச்சட்ட சபையில் தாம் இறக்கும்வரை இருந்து தொண்டாற்றினர்.

### கவர்ச்சிமிக்க புருஷர்

இவர் சொல் வன்மையையும் அஞ்சாமையையும் அதோடு சேர கம்பீரமானதும் கவர்சிகரமானதுமான தோற்றத்தையும் கொண்டவராக இருந்தார். பிறக்கில் இராமநாதனைப்போல் பிறக்கவேண்டும் என்று சொல்லுமளவுக்கு பலராலும் கவரப்பட்ட ஒரு சிறந்த மனிதர் இவர்.

சொலிசிட்டர் ஜெனரலாக இருந்தபோது பல நன்மையான சட்டங்களை நிறைவேற்றச் செய்தார். பௌத்த ஆலயங்களின் சொத்துப் பாதுகாப்புச் சட்டம் அவற்றுள் முக்கியமானதாகும்.

மேற்றிசை நாகரிகத்தை நன்கு அறிந்திருந்த இவர் அத்தகைய நாகரிகப்போக்குகளை விட்டுத் தமிழ் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டதோடு வடமொழி நூல்களையும் நன்கு கற்றார். அமெரிக்க அறிஞர்களின் அழைப்பிற்கிணங்க அந்நாட்டு பல்கலைக் கழகங்களிலும் சபைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் செய்தார்.

பகவத்கீதையை தமிழில் பெயர்த்து, அதற்குச் சைவ சித்தாந்த பரமாக ஒரு விருத்தியுரையும், திருக்குறட் பாயிரத்திற்கு 'இராமநாதீயம்' என்ற விருத்தியுரையையும், செந்தமிழ் இலக்கணம், ஆத்திசூடி, மந்திர விளக்கம் என்னும் நூல்களையும் எழுதி வெளியிட்டார். இவர் ஆங்கிலத்திலும் பல நூல்கள் எழுதியுள்ளார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஹாரிசன் அம்மையார் இவரது வாழ்க்கைத் துணைவியரானர். இராமநாதன், யாழ்ப்பாணத்தில் பெண்களுக்காக இராமநாதன் கல்லூரியையும், ஆண்களுக்காக பரமேஸ்வரக் கல்லூரியையும் நிறுவினர். பல கோவில்களை நிறுவயதோடு பல திருப்பணிகளும் ஆற்றினர்.

இலங்கையில் மக்கள் சட்ட சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை முதன் முதலாக 1910-ம் ஆண்டில் ஏற்பட்டது. ஆங்கிலம் கற்றவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதிநிதி பதவியை இராமநாதன் ஒரு சிங்கள பிரமுகருடன் போட்டியிட்டுப் பெற்றுக்கொண்டார். இந்த அந்தஸ்து தேசியத் தலைவர் ஒருவருக்கல்லாது வேறு யாரைச் சென்று அடைய முடியும்?

இவர் சட்டசபையின் உள்ளும் புறமும் இருந்து ஆற்றிய கடமைகள் பல. அவை உலகப் பிரசித்தி பெற்றவைகளாகும். முதலாவது உலக மகா யுத்தம் நடைபெற்ற காலத்தில் 1915ல் இலங்கை தேசாதிபதியின் இராணுவச் சட்டத்தை எதிர்த்து சட்டசபையில் 13 மணி நேரம் தொடர்ந்து பேசினர். சட்டசபையில் அது தோற்றுப்போகவே, இங்கிலாந்து சென்று வாதாடினர். அதன் பயனுக இலங்கைத் தேசாதிபதி அப்பதவியினின்றும் நீக்கப்பட்டார். அன்று இராமநாதன் வெற்றிவாகையுடன் கொழும்பு திரும்பி வந்தபோது இலங்கை முழுதுமே திரண்டாற்போல் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமது இனம், மொழி, சமயம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பற்றுதலுடன் தொண்டாற்றிய அதே நேரத்தில் தன்னிலைமை மாருமல் நின்று தேசியத் தலைவராகவும் விளங்கியவர் சேர். இராமநாதன்.

## கலைஞர்களும் பொதுமக்களும்

இசைவிழாக்களும் முத்தமிழ்விழாக்களும் இப்போது மூலைக்கு மூலை நடைபெறுகின்றன. பல பல கலைஞர்கள் இதில் உற்சாகத்துடன் பங்கு பற்றுகின்றார்கள். ஏராளமான மக்கள் கூடி கலை விருந்துகளை ரஸிக்கின்றனர். வளரும் சமூக வாழ்வுக்கு இவை நல்ல அறிகுறிகள்.

சென்ற சனிக்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலைப்பெருமன்ற விழாவிலே இயல், இசை, நாடகமெனும் முத்தமிழிலும் பல கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று மக்களைப் பரவசப்படுத்தின. இவ்வித கலைவிழாக்கள் ஆங்காங்கே அடிக்கடி நடைபெறுவது மக்கள் வாழ்வு இன்பமயமாகி மேம்பட உதவுவதாக இருக்கும்.

இக்காலத்திலே கலைகளைச் சிலர் வெறும் வியாபாரச் சரக்குகளாக்கி, விலையாக்குவதாயும், பணவருவாயையே முக்கியமாகக் கருதி; கலையை மிகக் கீழ்த்தரமாக்கி மக்கள் மனதைக் கெடுப்பதாயும் இவ்விஷயத்தில் சினிமாப் படங்கள் பெருந்தீங்கு விளைவித்து வருவதாயும் கலைப்பெருமன்ற விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய செந்தமிழ்க்காவலர் முதலியார் சின்னத்தம்பி அவர்கள் வருந்தினர். அவர் பேசிய விவரத்தை மற்றோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். அதில் பல உண்மைகள் பொதிந்துள்ளன.

நாம் விரும்பினுலும் விரும்பாவிடினும் இக்காலத்தில் சினிமாககள்தான் பொது மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. கோவிலில் தரிசனம் செய்ய ஆட்கள் கிடையாது. ஆனல் சினிமாப்படங்களைப் பார்க்க மணிக்கணக்காக வெயிலில் கியூவரிசையில் பல்லாயிரவர் காத்துக் கிடக்கின்றார்கள். காசு கொடுத்து சீட்டு வாங்க 'அடிதடிகள்! ஏன்? மக்கள் தங்களைச் சற்று கிலும் மறந்து இன்பமாகப் பொழுது போக்க சினிமாக்களையே இன்று நம்பியிருக்கின்றார்கள். வரவர சினிமாச் சாலைகள் முன்கூட்டம் அதிகரிக்கின்றதேயன்றி குறைந்தபாடில்லை. சினிமா பார்க்கக் கூடாதென்று ராஜாஜி முன்னர் கரடியாகக் கதறினர். அவர் பேச்சு யார் செவியிலும் ஏறவில்லை. பொழுதுபோக்க மக்களுக்கு மாற்று வழி ஏற்படுத்துவதுடன், கூடுமான வரை உயர்தரமான சினிமாப் படங்களையே பிடிக்க ஒழுங்கு செய்வதால், இன்றைய அவலநிலை மாறக்கூடும்.

நம்மிடையே கலைச்செல்வம் அதிகமுள்ளது. குழந்தைகள் பலர் அழகாக இனிமையாக ஆடுவதையும் பாடுவதையும் பார்க்கிறோம். பல்லாண்டுகள் பயிற்சி பெற்று நன்கு பாடக் கூடியவர்களும் பலருண்டு. அவர்கள் தங்கள் கலைச்செல்வத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பங்கள் இல்லை. முன்காலத்தில் நம் கோவில்கள்கலைக் கூடங்களாக விளங்கின. அங்கு கலைகள் விலையாக்கப்படுவதில்லை. இலவசமாக யாரும் வந்து பார்த்தும் கேட்டும் இன்புறலாம். தெய்வீகச் சூழ்நிலையில் கலைகளும் ரஸம் குன்றுமலிருக்க முடிந்தது. கோவில்களை விட்டு கலைகள் வெகுவாய்ப் பிரிந்தபின், கோவில்கள் பாழடைந்ததுடன் கலைகளும் தரம் குன்றிப் போக இடமேற்பட்டது. கோவில்களில் மீண்டும் பலபல அருங்கலை நிகழ்ச்சிகளுக்கு இடமேற்படுத்துவது இன்றைய அவல நிலையை மாற்ற ஒருவழியாகும். கலைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் நல்ல உறவும் தொடர்புமேற்படும்.

இதேசமயம் கலைகள் நல்ல முறையில் வளர்வது கலைஞர்களையேபெரிதும் பொறுத்துள்ளது, நாட்டின் உண்மைச்செல்வங்களான மதிப்புக்குரிய கலைஞர்கள், தூய்மையான வாழ்வு வாழ்வதுடன், தாழ்வான நோக்கங்களுக்குத் தங்கள் கலைகளை விற்க கண்டிப்பாக மறுக்கவேண்டும். தங்களுக்கு இறைவனல் அளிக்கப்பட்ட கலைச் செல்வத்தை, மக்களின் மேன்மைக்கே பயன் படுத்த கலைஞர்கள், சேவை உள்ளத்துடன் முன் வந்தால், அவர்கள் பொது ஜனங்களின் நன்றிக்குப் பாத்திரமாவதுடன், பொதுஜன ஆதரவும் அவர்களுக்கு அமோகமாகக் கிடைப்பதாகும். கலைகளும் நல்ல முறையில் வளரக் கூடும்.

## "தமிழர் திருநாட்கள் புனிதமானவை"

தெல்லிப்பழை, ஞாயிறு

"தமிழர் திருநாட்கள் மிகப் புனிதமானவை. அவற்றை புனிதத் தன்மை கெடாமல் கொண்டாடுதல் வேண்டும். புனிதத் தன்மையுள்ள நிகழ்ச்சிகளை நடத்துவதின் மூலமே இத்தகையாக விழாக்கள் சிறப்புப் பெறுகின்றன. பண்டு தொட்டே தமிழ் மக்களுக்குரித்தான திருநாட்கள் சிறப்புடன் மக்களால் கொண்டாடப்பட்டு வந்துள்ளன."

இவ்வாறு மாவிட்டபுரம் மூத்தமிழ் கலைமன்றம் புதுவருட தினத்தைக் கொண்டாடும் வகையில் நாடாத்திய நிகழ்ச்சியில் பேசுகையில் குரும்பசிட்டி சன்மார்க்க நாடக மன்றத் தலைவரும், மாவை முத்தமிழ்க் கலைமன்ற நாடக இயக்குநருமான திரு. ஏ. டி. பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய திரு. எஸ். டி. சண்முகநாதன் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

"அன்பின் மிகுதிப்பாடாக நாம் கருதும் ஓர் பொருளைக் கண் எனப் பாதுகாக்கின்றோம். அதற்கு கோவில் கட்ட முனைகின்றோம். கல்வியில் கொண்ட ஈடுபாடு கல்விக் கூடமாகவும், கடவுளிடம் கொண்ட பிரேமை ஆலயமாகவும், தொழில் விருப்பு தொழிற் சாலையாகவும் விளங்கும் காலத்தில் நாம் வாழ்கின்றோம்."

ஆசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் எழுதிய மாருதப்புரவீக வல்லி என்னும் சரித்திர நாடகத்திற்கான ஒத்திகையும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாடகம் ஆடி மாதம் மேடையேற்றப்படுமென அறிவிக்கப் பட்டிருக்கிறது.

## சிவாஜிகணேசன் வாஷிங்டன் விஜய

### 16 உ 'வாய்ஸ் ஆப் அமெரிக்க' ஒலிபரப்பு

லண்டன், ஏப். 15

தமிழ் திரைப்பட நடிகர் சிவாஜிகணேசனின் வாஷிங்டன் விஜயம் பற்றி 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' விசேஷ நிகழ்ச்சியொன்றை ஏப் 16-ந் தியன்று தமிழில் ஒலிபரப்பு செய்கிறது.

வாஷிங்டனில் சிவாஜிகணேசனின் அலுவல்கள், அவருடன் பேட்டி முதலியவை அந்த ஒலிபரப்பில் இடம் பெறும் என்றும் அமெரிக்கத் தகவல் நிலையத்தின பத்திரிகைக் குறிப்பு ஒன்று பவிக்கிறது.

### ஐயாறன் எழுதுவது

இப்போது யாழ்ப்பாணத்திலே பாலும் தேனும் கலந்து ஓடுகிறது! புதுவருஷ தினத்தன்று இந்தப் பாலும் தேனும் பருக எவ்வளவு கூட்டம்! என்ன தள்ளுமுள்ளு தெரியுமா?

பாலாவது தேனுவது என்று கேட்கிறீர்களா? பாலும் பழமும், தேன் நிலவு என்ற சினிமாப் படங்களைப் பற்றித்தான் கூறுகிறேன். புதுவருட தினத்தன்று இப்படங்களைப்பார்க்கக் கூட்டம் தாங்க முடியவில்லை. டிக்கெட்டுக்கு அடிதடி! முதல் காட்சிக்கு டிக்கெட் வாங்கியும், கூட்டத்தால் உள்ளே செல்ல முடியாமல், இரண்டாம் காட்சிக்குச் சென்றாராம் ஓர் அன்பர்.

தியேட்டருக்குள்ளாக, கூட்டமும் புழுக்கமும் தாங்காமல் ஒருவர் மூர்ச்சையாகி விழுந்து விட்டாராம். பின்னர் அவருக்கு சோடா கொடுத்து, முகத்தில் நீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்ததாயும் நேரில் பார்த்தவரொருவர் கூறுகின்றார். இன்னும் எவ்வளவோ பேர் என்னென்ன அவதிப்பட்டார்களோ! புதுவருஷத்தில் தேனும் பாலும் பருகுவதென்றல் கேட்கவேண்டுமா?

படம் எப்படி என்று விசாரித்தேன். இரு படங்களும் நன்ருக இருப்பதாகத் தெரிவித்தனர். இன்னும் சில நாட்களுக்குக் கூட்டம் அதிகமாகத்தான் இருக்குமென்றும், பின்னர் சாவகாசமாகப் போய்ப் பார்க்க இருப்பதாகவும் கூறுகிறார் ஓர் அன்பர். இவ்வளவு பொறுமை எல்லாருக்கும் உண்டா?

* * *

புதுவருடத்தன்று இம்முறை பல இடங்களிலும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் முழங்கியுள்ளன. கூட்டுப் பிரார்த்தனை, பக்திப் பாடல்கள், கோவில் வழிபாடுகள் எல்லாம் பல இடங்களிலும் விசேஷமாக நடந்துள்ளன.

இங்கு பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் "கைவிசேஷம்" என்ற நல்லதோர் பழைய வழக்கம் இருந்து வருகின்றது. புதுவருடத்தன்று பல ஸ்தாபனங்களிலும் சிப்பந்திகள் அனைவருக்கும் குறைந்தது ஒரு ரூபாய் ஒரு சதம் வீதம் வெற்றிலை பாக்கு, புதுநெல், மஞ்சள் இவை வைத்து, அன்புடன் கொடுக்கின்றனர்.

கிடைக்கும் நெல்லை எண்ணி, அது ஒற்றைப் படையாக இருந்தால் புதுவருடத்தில் நல்ல அதிர்ஷ்டம் ஏற்படலாமென்று பொதுவாக நம்பிக்கை. தொழிலாளருக்கும் நிர்வாகிகளுக்கும் அன்புறவு நிலவ, இவ்வித வழக்கங்கள் பெரிதும் உதவலாம். தொழில் அமைதி நிலவி, அது வளர்ச்சி பெற அன்புறவு தான் பெரிதும் உதவுமேயன்றி, வெறும் காகித சட்ட திட்டங்களல்ல.

* * *

வவுனியாவிலிருந்து ஓர் ஆசிரிய அன்பர் வந்தார். மலைநாட்டிலிருந்து பல தமிழ்க் குடும்பங்கள் வவுனியாவில் குடியேறி கமம் செய்வதாயும், அவர்கள் நல்ல உழைப்பாளிகளென்றும், இதனல் நல்ல வருவாய் அவர்களுக்குக் கிடைப்பதாயும் தெரிவித்தார். வவுனியாப் பகுதியில் ஏராளமான காடுகள் திருத்தி பண்படுத்த வேண்டியிருப்பதாயும், மலைநாட்டுத் தமிழர் வந்தால், இக்காடுகளெல்லாம் சில வருடங்களில் நல்ல வயல்களாகி, நெல் முதலியன விளைந்து, வெளிநாட்டிலிருந்து அரிசியே இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லாது போகுமென்றார். ஆனல்.........

*

குடியேறியுள்ள மலைநாட்டுத் தமிழ் மாணவர்களைப்பற்றிக் கேட்டேன். ஒழுக்கத்திலும் கீழ்ப்படிதலிலும் அவர்கள்

(5ம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழே உத்தியோக மொழி

## திரு. குலரத்தின கூறும் யோசனை

வத்தளை, சனி

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் உத்தியோக மொழியாக்கப்பட வேண்டும். இதர ஏழு மகாணங்களிலும் சிங்களம் உத்தியோகமொழியாக்கப்படவேண்டும், இது எனது சொந்த அபிப்பிராயம்" என்று அம்பலாங்கொடை எம். பி. திரு. பி. டி. எஸ். குலரத்தின, களனியில் வித்தியாலங்கார சர்வகலாசாலையின் கல்விக்கழகத்தில் பேசுகையிற் தெரிவித்தார்.

வித்தியாலங்கார சர்வகலாசாலையின் ஒரு விரிவுரையாளர் திரு. கீர்த்தி திஸநாயக்கா தலைமையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் திரு. குலரத்தின பேசினர். அவர் மேலும் கூறியதாவது:-

பிள்ளைகளைப் பாடசாலைகளில் அனுமதிப்பது சம்பந்தமான புதிய திட்டத்தில் மக்களிடையில் பெரும் அதிருப்தி நிலவுகின்றது. வருடத்தில் இரண்டு தடவைகள் பிள்ளைகளைப் பாடசாலைகளிற் சேர்க்க அனுமதிக்கவேண்டும்.

கிராமப் பகுதிகளில் ஆங்கிலத்தைப் புகுத்த முயற்சி செய்வதன்மூலம் கல்விக் கமிஷன் மக்களைத் தவருன வழிக்கு இட்டுச்செல்கிறது. ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ள எவரும் விரும்பினல், ஆங்கிலம் கற்பிக்கும் கல்விநிலையங்களைத் தேடிக்கொள்வது அவர்களைப் பொறுத்தது. கல்விக் கமிஷன் மக்களுக்குத் தவருக வழிகாட்டியதுடன் தவருன வழிக்கும் அவர்களை இட்டுச் சென்றுவிட்டது.

## ஆசிரியர் உருவப்படத் திறப்பு

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 30 ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்து இளைப்பாறிய திரு.அ. கந்தையாவின் நிழற்படத்தை நாளைமாலை கல்லூரியில் காங்கேசன்துறை எம். பீ. திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் திரை நீக்கம் செய்து வைக்கவிருக்கிறார்.

## நஞ்சருந்தி வாலிபர் தற்கொலை

### கைதடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடியைச் சேர்ந்த கதிரன் வேலன் என்ற 23 வயது வாலிபர் நஞ்சு அருந்தித் தற்கொலைசெய்துகொண்டார்.

இத் திடீர் மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம்விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் கதிரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எங்களுக்கு விவாகமாகி 3 வருடங்கள் ஆகின்றன. பிள்ளைகள் இல்லை. எனது கணவர் நிறைவெறியுடன் காணப்படும் ஒரு குடிகாரர். சம்பவம் நடந்த தினத்தன்று 2 வாழைக்குலைகள் விற்பதற்காக சந்தைக்குச் சென்று திரும்பியிருந்தார்'மாலையில் தமது தாயார் வீட்டுக்குச் செல்வதாகச் சொல்லிச் சென்ருர். திரும்ப ஒரு பொலிடோல் போத்தலுடன் வந்தார். நான் அதைப் பற்றி விசாரித்தபோது, 'புகையிலைக் கன்றுக்குத் தெளிக்கவே பொலிடோல் வாங்கிவந்தேன்' என்றுகூறிக் கொண்டு வீட்டுக்குள்ளே சென்ருர். அங்கிருந்து 'பொலிடோல் குடித்துவிட்டேன் பார்த்தியோ'என்று கேட்டுக்கொண்டு வெளியே வந்தவர் கீழே வீழ்ந்தார். உடனே கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ருேம். அங்குஅவர் மரணமானர். இதுபற்றி நான் எதுவித சந்தேகமும் கொள்ளவில்லை.

சட்டவைத்தியஅதிகாரி டாக்டர்ஏ. வைத்தியலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## சஞ்சீவரெட்டியின் ராஜினமா

### காங்கிரஸ் காரியக் கமிட்டி ஏற்றது

புதுடில்லி, ஏப்ரல் 15

அகில இந்திய காங்கிரஸின் காரிக்யகமிட்டிகூட்டம்நேருபிரதமர்வின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற போது காங்கிரஸ் அக்ராசனர்திரு. என். சஞ்சீவ ரெட்டியின் ராஜினமாவை ஏற்றுக்கொண்டது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இடைக்கால தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படும்வரை பதவியிலிருக்கும்படி திரு சஞ்சீவ ரெட்டியை காரியக்கமிட்டி கேட்டுக் கொண்டது.

பொதுத்தேர்தல் பற்றியும் காரியக்கமிட்டி ஆராய்ந்தது.

## புகைபிடிக்கும் பெண்களுக்கு சிறிய குழந்தைகள்

லண்டன், ஏப் 13

புகை பிடிக்கும் கர்ப்பிணிகளுக்கு, புகை பிடிக்காத கர்ப்பிணிகளுக்கு பிறக்கும் குழந்தைகளை 'விட சிறிய குளந்தைகளே பினக்கக்கூடும் என்றும் அவை நிறை மாதத்துக்கு முன்னதாகவே பிறக்கக்கூடும் என்றும் வைத்திய சஞ்சிகையில் வைத்திய ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## விசாகை விமானசேவை

ஹைதராபாத், ஏப். 15

ஹைதராபாத்துக்கும் விசாகப்படணத்துக்மிடையில் நாளை தொடக்கம் விமான சேவை ஆரம்பமாகிறது.

# 'தமிழ் சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளைந்தெறியவீரஇளைஞர் தோன்றவேண்டும்'

## புங்குடுதீவில் திரு.வி.ஏ. கந்தையா

புங்குடுதீவு, ஞாயிறு

"விளையாட்டுக்கள் சிறந்த வீரர்களை உற்பத்தி செய்து நாட்டுக்கு அளிக்க வல்லன. வீரர்களுக்கிடையே சாதிப் பூசல்களோ குரோத மனப்பான்மையோ ஏற்படுவது இல்லை. தமிழ்ச் சமுதாயத்தின் சாபத்தீடுகளான தீண்டாமை போன்ற பல விஷயங்களை பூண்டோடு களைந்தெறிய இத்தகைய வீரசமுதாயம்தான் நமது இன்றைய தேவை."

இவ்வாறு புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் 37-வது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய ஊர்காவற்றுறை பார்லிமெண்ட்அங்கத்தவர் திரு. வி. ஏ. கந்தையா குறிப்பிட்டார். இவ்விழா புங்குடுதீவு அனுதை மாணவர் முன்றலில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது. திரு. கந்தையா மேலும் பேசியதாவது:-

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு முக்கியமானதாகும். தமிழ்ச் சமுதாயத்தில் இன்று ஒற்றுமை இல்லை. சாதியாலும் குரோதத்தாலும் பிரிந்திருக்கிறேம். இந்த நிலைமையே இன்றைய எமது நிலைமைக்குக் காரணமாகும் இதைப் போக்கி நம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடியவர்கள் வீர இளைஞர்களே. விளையாட்டுத் துறைகளில் ஈடுபடும் இளைஞர்கள் வீரர்களுக்குரிய பண்பைப் பெறுகிறுர்கள்.

இப்படியான இளைஞர்களை உற்பத்தி செய்வதில் பணியாற்றும் சங்கங்களுக்கும் கழகங்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். இம்முயற்சியில் இவைகள் மேலும் ஈடுபட்டுழைத்து நமது சமுதாய விடுதலைக்கு வழியேற்படுத்தவேண்டும்."

கிராமசபைத் தலைவர் . திரு. எஸ். சபாரத்தினம் உட்பட இன்னும் பலரும் பேசினர்.

அகில இலங்கைத் தமிழாசியர் சங்கத் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட திரு. கு. வி. செல்லத்துரையைப் பாராட்டிப் பாராட்டுரை வழங்கப்பட்டது.

புத்தாண்டு தினத்திற்கு முதல் நாள் இவ்விழாவையொட்டி நடைபெற்ற சைக்கிள் போட்டி, நீச்சல் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

'பணம் பேசுகிறது' என்ற கழக இளைஞர்களின் நாடகமும் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

## சரவணை சேவாமன்றம்

### புதியநிர்வாகிகள் தெரிவு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை சேவா மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சரவணை 'நாகேசுவரி' வித்தியாசாலையில் பண்டிதர் திரு. குமரேசையா தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. சேதுகாவலர். உப-தலைவர்: திரு. சி கணபதிப்பிள்ளை, கௌரவ காரியதரசி: திரு. செ. ச. சிவம் உப-காரியதரிசி: திரு. மா.இலிங்கப்பிள்ளை, தனதிகாரி: திரு க. திருநாவுக்கரசு.

## தீவுப்பகுதி பஸ்கட்டணம்

### குறைக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதியில் அறவிடப்படும் இ. போ. ச. பஸ் கட்டணம் ஏனைய இடங்களிலும் பார்க்கக் கூடுதலாக இருப்பதனல் அதைக் குறைக்க வேண்டும் என அரசினரைக் கேட்டுக்கோள்ளும் தீர்மானம் ஒன்று நேற்று மாலை நடைபெற்ற சரவணை சேவாமன்றத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு. கி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சரவணைக் கிராமத்தில் உள்ள மூன்று வட்டாரங்களையும் வேலணைக் கிராமச்சங்கத்துடன் சேர்க்க வேண்டுமென சம்பந்தபபட்ட அமைச்சரைக கேட்டுக் கொள்ளும் மற்றேர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## வாணியம் பாடியில் ஆலங்கட்டி மழை

வாணியம்பாடி, ஏப்ரல் 14

நேற்று மாலை நகரிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் அரை மணி நேரத்துக்கு பலத்த காற்று வீசியது. அதைத்தொடர்ந்து ஆலங்கட்டி மழை பெய்தது.

பல மரங்கள் வேரோடு விழுந்தன. சில குடிசைகளின் கூரைகள் காற்றில் பிய்த்துக் கொண்டு போயிற்று. காதர் பேட்டையில் நகர சபை பூங்காவில் மரமொன்று விழுந்து காளை மாண்டது. மின்சாரக் கம்பிகள் பாதிக்கப்பட்டு மின்சார சப்ளை சீர்குலைந்தது. புது நகரில் ரயில் கேட்டுகளில் ஒன்று புயலில் (?) வளைந்து போயிற்று.

# 'கசிப்பு முதலாளிகளிடம் சில அதிகாரிகள் சிக்கி விட்டனர்'

## அமைச்சருக்கு வாலிபர் சங்கக்கமிட்டி மகஜர்

கொழும்பு, ஞாறுயி

"சட்டவிரோத மதுபான உற்பத்தியை பொலிஸ் அதிகாரிகளும் கலால் பகுதி அதிகாரிகளும் வெற்றிகரமாக ஒழித்துக்கட்டுவார்களென்று எதிர்பார்ப்பதுமுட்டாள்தனம், ஏனெனில் இந்த அதிகாரிகளில் பெரும்பாலனவர்களை 'கசிப்பு' முதலாளிகள் வாங்கிக் கொண்டார்கள்" என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் விசேஷ கமிட்டியொன்று உள்நாட்டு கலாசார விவகார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவிடம் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் தெரிவித்துள்ளது.

நச்சுத்தன்மையுடைய இந்தமது பானங்களைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் பொருள்களை முக்கியமாக புளிப்புச் சத்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் கட்டுப்பாடு விதிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி விசேஷ கமிட்டி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானத் தயாரிப்பை ஒழித்துக் கட்டுவதற்கு ஒத்துழைக்குமாறு உள்நாட்டு மந்திரி விடுத்த கோரிக்கைக்கிணங்க தாங்கள் பூர்வாங்க பரிசீலனை நடத்தியதாக விசேஷ கமிட்டி தனது மகஜிரில் தெரிவித்துள்ளது.

சில பொலிஸ் அதிககரிகள் கசிப்பு முதலாளிகளிடமிருந்து மாதம் 500 ரூபாய் அலவன்சாகப் பெற்றுக் கொள்வதாகவும் மோட்டார் கார்கள், குளிர்சாதனப் பெட்டிகள் முதலியவைகளையும் அவர்கள் பெற்றுக் கொள்வதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு சமயம் ஒருபகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பு அதிகாரியான ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு மாதத்துக்குத் தேவையான பொருள்கள் முழுவதையும் அப்பகுதியிலுள்ள ஒரு கசிப்பு முதலாளியிடம் வாங்கியதாகக் கண்டு கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எல்லோரையும் குறை சொல்லவில்லையென்றும் நேர்மையானவர்களும் இருக்கின்றனரென்றும் தெரிவிக்கும் மகஜர் நேர்மையானவர்கள் குறைவாகவிருப்பதால் சட்ட விரோத மதுபானத் தயாரிப்பை அவர்களால் மட்டும் கட்டுப்படுத்திவிட முடியாதென்றும் கூறுகிறது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்துவிளங்குவதுடன், படிப்பிலும் விளையாட்டிலும்கூட முன்னணியில் இருப்பதாகத் தெரிவித்தார். கோவில் புதுக்குளத்தைச் சேர்ந்த இந்து தமிழ்ப்பாடசாலையைச் சேர்ந்த ஒரு மலைநாட்டு மாணவ மணி நல்ல விவேகி என்றும் விளையாட்டில் மன்னர், வவுனியா, முல்லைத்தீவு இம்மூன்றிலும் முதல்வராக வந்ததாயும் இப்போது மகா வித்தியாலயத்தில் படிப்பிலும் முதன்மையாக இருப்பதாகவும் கூறினர். கேட்க மிகப் பெருமையாகவும், நம்பிக்கை அளிப்பதாகவுமிருந்தது.

* * *

தேடிக் கண்டுகொண்டேன்-
திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத்
தேவனை என்னுளே
தேடிக்கண்டு கொண்டேன்.
—திருநாவுக்கரசர்.

## நேருவுக்கு சூவின் வாழ்த்து

புதுடில்லி, ஏப் 15

திரு. நேரு மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டதை குறித்து மக்கள் சீனக் குடியரசின் பிரதமர் திரு. சூஎன்லாய் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்

# கலைகளின் இன்றைய நிலை

## உண்மைக்கலைவளர்க்கும்பெரும்பணியில் கலைஞர்கள் ஈடுபடவேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைப்பெருமன்ற ஆரம்ப விழாவில் செந்தமிழ்க் காவலர் முதலியார் செ. சின்னத்தம்பி நிகழ்த்திய தலைமையுரையின் சுருக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

கலைகள் இன்று ஆபத்து மிக்க சூழலில் அகப்பட்டுக் கொண்டன. கலை விலைப்பொருள் அன்று அஃது விலைமதிப்பற்ற விழுமிய செல்வம். இப்பெருஞ் செல்வம் இன்று வணிகர் கையில் சிக்கிக் கொண்டு தவிக்கின்றது. எல்லாம் வியாபாரமயம் என்ற இக்காலப் போக்கில், எங்கள் தூய கலைகளுக்கு ஏற்பட்டுள்ள இக்கொடிய ஆபத்தை விலக்குவது எளிதான காரியமல்லா விட்டாலும், இந்தப் போக்கை எதிர்த்து விரைவில் வெற்றி காண நாடு முன்வரவேண்டும் இன்றேல், கலைகள் தீமை விளைப்பவை; மக்கள் மனத்தைக் கெடுப்பவை; சீலத்தின் பகை; பண்பாட்டின் விரோதி; அவை நஞ்சு என்று பண்டு ஒருகால் ஒதுக்கப்பட்டது போல் ஒதுக்கப்படவேண்டிய நிலை ஏற்படக்கூடும். பாமரர் நிலைக்குக் கலை இழுக்கப்படுவதால் கலைக்கும் இழிவு; நாட்டுக்கும் கேடு.

புன்மைக் குழியில் வீழ்ந்து கிடந்த எங்கள் கலைகளை ஞானசம்பந்தர் போன்ற நாயன்மார்களும், ஆழ்வார்களும், அண்மைக்காலத்தில் தியாகராயர் போன்ற ஞானச் செல்வர்களும் மீட்டுத்தந்தனர். இப்பெருமக்களுடைய உழைப்பால் புனிதம் பெற்ற தெய்வ மணம் கமழப்பெற்ற இக்கலைகள் மீண்டும் வீழ்ச்சியடையத் தொடங்கியிருக்கும் நிலைமையை சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் என்று நாட்டிற்கு எச்சரிக்கைக் குரல் எழுப்ப வேண்டியிருக்கிறது.

### சினிமாக் கலை

சினிமா முதலாளிகளும், சினிமா நடிகர்களுமே எங்கள் கலைகளின் விரோதிகள் என்பதைத் துணிவோடு கூறிவிரும்கின்றேன். பாமர மக்களின் சிறுமை உணர்ச்சிகளுக்குப் பெருவிருந்தளித்துப் பணம் பறிக்கும் புன்மையில் ஆழ்ந்து கிடக்கின்றது சினிமா உலகம் தூய கலைகளை வளர்க்கின்றோம் என்ற போர்வையில் மக்கள் மனங்களை சிறுமைச் சுவையில் ஊறித்திளைக்குமாறு செய்யும் வஞ்சனைக் கலையிலன்றோ திரைப்பட உலகம் இன்று வெற்றிகண்டிருக்கிறது அவர்கள் கையாளும் மாரீச வித்தையால் சூர்ப்பனகைத் தந்திரத்தால் நாட்டிற்கு நன்மையா விளையும்?

கதிக்கொரு கல்விகாட்டி, நிதிவழி நேயம் நீட்டும் மன்றலம் கோதை மாதர் மனம் போல், அந்த மாரீசப் பொன்மான் இராமனை வஞ்சித்து ஈர்த்துச் சென்று வன்மப்படுகுழியில் வீழ்த்தியது போல் சினிமாக் கலையும் நமது நாட்டு மக்களை புன்மையில் வீழ்த்தி விடும். வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். அழகின் பரிபூரண கோலத்தோடு சூர்ப்பனகை இராமனை வஞ்சிக்க வந்தும், இராமன் மயங்கவில்லை. அவள் அரக்கி என்பதைத் கொண்டமையால், இராமன் நிலையில் தடுமாற்றம் ஏற்படவில்லை. இந்த அளவில் சினிமா கூட்டத்தாரால் கலைகளுக்கும், நமக்கும் விளையும் தீங்கைக் குறிப்பாக ஊர்த்த முயன்றேன்.

இந்த வகையான தீங்குகளைத் தவிர்க்கவும், எதிரிர்த்துப் போராடவும், இன்று யாம் உருவாக்கும் கலைப்பெருமன்றங்கள் போன்றவை அவசியமாகின்றன. போட்டிக்கும் பொறுமைக்கும் இரையாகி அழியாமல், உண்மை நெறியில் உயர் நெறியில் கலைகளை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு உழைக்கும் பல்துறைக் கலைஞர்களும் இந்தக் கலைபெருமன்றத்தில் சேர்ந்து உழைக்க வேண்டும் என்றும் நாட்டின் பெயரால் கலைகளின் பெயரால் மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

### கலைகளும்கலைஞர்களும்

கலையின் தரத்தை கலையின் இலக்கியத்தைத் தமது உயிரெனப் போற்றி வளர்க்க வேண்டியது உண்மைக் கலைஞர்களின் கடமையாகும். இந்த வேளையில் நமது கலைகளின் உண்மை இலட்சியத்தையும் பரம்பரைப் போக்கையும் சிறிது சிந்தித்துத் தெரிதல் அவசியம்.

மண்மீது கட்டுண்டு கிடக்கிறான் மனிதன்; எத்தனையோ ஆசாபாசப் பிணிப்புகளுக்கு ஆளாகிக் கிடக்கின்றது மனித உலகம். ஆசை கோரளவில்லையல்லவா! ஆசைப்பட்டேன் அல்லற்பட்டேன் என்ற சோகக் குரல் அநுபவக்குரல். இந்த ஆசையெனும் இருட்சிறையினின்றும் நம்மை விடுவித்துப்புலன்களுக்குமப்பாற்பட்ட ஆனந்த உலகத்திற்கு நம்மை அழைத்துச் செல்பவன் கலைஞன்.

உண்டுடுத்து உறங்கி வாழும் வாழ்க்கையினின்றும் எமது சிந்தனைகளைப் பிரித்தெடுத்து விண்ணுலக சஞ்சாரம் செய்விப்பதும் கலையே.

வேகமாய் இடையறுது நமது உள்ளங்களில் பொங்கிக்கிடக்கும் சிறுமை உணர்ச்சிகளிலிருந்தும் நம்மைப் பேதித்து வளர்த்தெடுத்து உய்ய வைக்கும் பெய்பவளே கலைத்தெய்வம்.

அல்லும் பகலும் அயராது உழன்று சுழன்று உழைத்து உழைத்து ஓய்வே அறியாத உள்ளத்திற்கு ஆறுதலும் அமைதியும் அளிப்பது கலை. தன்னினைவோடு இருக்கும் வரை மனிதன் அல்லலில் ஆழ்கின்றான். தன்னினைவற்ற நிலையை, தன்வசமிழந்தநிலையை உண்டாக்கும் ஆற்றல் கலைக்கு மட்டும்தான் உண்டு. தன்வசமிழந்த ஆனந்த நிலையிற் பிறப்பது கலை; தன்வசமிழந்த ஆனந்த நிலை கைகூடச் செய்வதும் கலை. அழகின் தரிசனமும் ஆனந்த அனுபவமுமே உண்மைக்கலைஞனது கலைக்கு நிலைக்களமானவை.

### கலைநிகழ்ச்சி

உலகையும், உலகஆசைகளையும்மறந்து, தனக்கு வாய்த்த திவ்வியதரிசனத்தில்சமாதிநிலை கூடித்திளைத்த திளைப்பில் ஊற்றெடுக்கும் ஆனந்த ஆவேசத்தில்-இன்பப் பெருவெறியாம் கலைவெறியால் - கலைஞன் உந்தப்பட்டுத் தனது அனுபவத்திற்கு உருவம் கொடுப்பதே கலைநிகழ்ச்சி.

எல்லா மனித உள்ளங்களிலும் கலையுணர்வு எனும் கவின் மண்டபமுண்டு; அது பெரும்பாலும் மூடிக்கிடக்கின்றது. அந்தக்கவின் மண்டபத்தின் கதவைத் திறந்துவைக்கும் ஆற்றல் உண்மைக்கலைஞனுக்கே உண்டு. இவ்வரிய உள்ளத் திறப்பால்நாமெல்லாம்காணாத ஆத்மீக அனுபவம் பெறவும் ஆனந்த வாழ்வில் அடியெடுத்து வைக்கவும் வழி செய்கிறான் கலைஞன்.

பாலைவனத்துப் பயிர்களைச் சோலையாக்கும் வல்லமை கார் மேகத்திற்கு உண்டாயிருப்பது போல், மக்கட்குலத்தின் தூய ஆனந்த உணர்ச்சிகளைச் செழிக்கச் செய்பவனே உண்மைக் கலைஞன்.

வளம் கொழிக்கும் மருதநிலச் செஞ் சோலைகளையும் மலர் வனங்களையும் அழித்தொழித்ததாடகைபோல் நமது சீலச் செழிப்புகளையும் பண்பாடுகளையும் அழிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் சினிமாக்காரரின் இராட்சப் போக்கை ஒழித்து உண்மைக்கலைவளர்க்கும்பெரும்பணியில் உழைக்க வாரீர் என்று இந்த ஆரம்பவிழாவில் கலைஞர்களை வேண்டிக் கொள்ளுகின்றேன்

# "பாகுபாடு காட்டுவதால் 'நாடற்றவர்' பிரச்சனை தீராது"

சென்னை, ஏப் 15

"இலங்கை ஜனத்தொகையில் கணிசமான ஒரு பகுதிமக்களுக்கெதிராகப் பாகுபாடு காட்டுவதும் கொடூரமாக நடந்து கொள்வது நாடற்றவர் பிரச்னையை இலங்கை அரசாங்கம் தீர்த்துக்கொள்ளக் கூடிய வழியல்ல" என்று சென்னையிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலத் தினசரியான 'இந்து' பத்திரிகை தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

"இலங்கையின் நாடற்றவர்கள்" என்ற தலைப்பில் சென்னை 'இந்து' மேலும் கூறியுள்ளதாவது:-

இலங்கையில் நீடித்து வந்த அவசரகால நிலைமை தளர்த்தப்பட்டதும் பத்திரிகைத் தணிக்கை எடுக்கப்பட்டதும், கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டதும் இலங்கையின் நண்பர்களுக்கு ஓரளவு ஆறுதலளித்தது. கடந்த காலங்களில் இருந்துவந்த அவசரகால நிலைமையின் அனுபவங்களால், சமீபத்தில் இருந்த அவசரகால நிலை நீங்கியதும் அரசாங்கத்தின் கொள்கையில், சகல பிரிவு மக்களுக்கிடையிலும் இருந்துவந்த வேற்றுமைகளையும் அதிருப்தியையும் நீக்குவதற்கு வழிவகுக்கக் கூடிய மாறுதல் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், இலங்கை தேசிய கல்விக் கமிஷன் செய்துள்ளதாகக் கூறப்படும் சில சிபார்சுகள், இலங்கையின் மொழிப் பிரச்னையிலும், 'நாடற்றவர்' பிரச்னையிலும் அரசாங்கத்தின் போக்கு இன்னமும் அரசியல் விவேகமின்மையையே காட்டுவதாகச் சொல்லத் தோன்றுகிறது.

இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சா வளியினரின் குழந்தைகளின் கல்விக்கு (தாய்மொழிக் கல்வி) அரசாங்கம் எந்தவிதமான விசேஷ வசதிகளும் செய்ய வேண்டியதில்லையென்ற கல்விக் கமிஷனின் சிபார்சும், "குடியேறிய மக்களின்" கல்விப் போதன மொழியை அவர்களுடைய விருப்பத்துக்கிணங்க வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியமுமில்லை; சாத்தியமுமில்லை என்று கமிஷன் கூறியுள்ளதாகக் கூறப்படும் குறிப்பும் நிலைமையை மேலும் மோசமாக்கக்கூடியதாகவிருப்பதால், சிங்களத் தலைவர்கள் சிலர் கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பீக்கிங்கில் இலங்கை ஸ்தானிகராகக் கடமையாற்றிய திரு. டபிள்யு ஏ. பெரேரா. கல்விக் கமிஷனின் சிபார்சுகள் பாகுபாடு காட்டுவனவாகவிருப்பதால், தயக்கமின்றிக் கண்டித்துள்ளார்.

"வேலை வாய்ப்புக்களிலும் கல்வியிலும் இலங்கையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களுக்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளில் தமிழ்ப்பேசும் மக்கள் திருப்திஅடைந்துள்ளனர்" என்று சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது இலங்கை கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் கூறியிருந்தார். கல்வி மந்திரி கூறியதைக் கேட்ட இந்திய மக்களுக்கு, இலங்கையின் இப்போதைய நடவடிக்கை, உண்மையில் வேதனையும் திகைப்பும் அளிக்கும். இந்தச் சிபார்சுகள் அமுல் நடத்தப்பட்டால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தோட்டத் தொழிலாளரான இந்திய வம்சாவளியினரின் லட்சக்கணக்கான குழந்தைகள் சிங்களப் பாடசாலைகளில் சேர்ந்து அதனல் ஏற்படக்கூடிய வசதிக் குறைவுகளை எதிர்நோக்க வேண்டும். அல்லது தமிழைப் போதனமொழியாகக் கொண்ட பாடசாலைகளை தோட்டங்களில் அவர்களுடைய சொந்தச் செலவில அமைக்க வேண்டும்.

இதை வேறு வார்த்தையில் சொன்னல் இலங்கையில் எல்லோரும் அனுபவித்து வந்த இலவசக் கல்வி திடீரென்று வாபஸ் பெறச் செய்யப்படுவதாகும்.

இலங்கையின் பொருளாதாரத்துக்காக பல தலைமுறைகளாக உழைத்தவர்களும் இலங்கையைத் தங்கள் நாடாக்கிக் கொண்டவர்களுமான இவர்களுக்கு நாட்டின் விவகாரத்தில் எவ்வித குரலுமில்லாமல் ஏற்கனவே நாடற்றவர்களாக்கிவிட்டதுடன், "குடியேறிய மக்கள்"; இவர்களின் கல்வி போதனைக்கு அரசாங்கம் பொறுப்பல்ல என்று கூறுவது நியாயமு

(5-ம் பக்கம் பார்க்க)

# "கலைஞரைப் போற்றினலே கலை வளரும்"

## கலைப்பெருமன்ற ஆரம்ப விழாவில் இளமுருகனர் பேச்சு

"அழகுக் கலைகளுள் தலை சிறந்தது இலக்கியம். புறவாழ்வுக்கு விஞ்ஞானம் எப்படியோ அகவாழ்வைச் சிறப்பிப்பது இலக்கியமேயாகும். இன்ப நிலையைத் தரும் இக்கலையைப் படைத்தளிக்கும் கலைஞர்கள் உலகத்தின் மேலான செல்வர்கள். அவர்கள் கௌரவிக்கப் பட்டாலே நாட்டுக்கேற்ற நல்ல படைப்புகள் கிடைக்கும்."

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம்வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைப் பெரு மன்ற ஆரம்ப விழாவில் இடம்பெற்ற கவியரங்கத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய பண்டிதர் சோ. இளமுருகனர் குறிப்பிட்டார். விழாவுக்குச் செந்தமிழ்க் காவலர் முதலியார் செ. சின்னத்தம்பி தலைமைவகித்தார். கலைஞர்களும் பொதுமக்களும் அதிகமாக வந்திருந்தனர். மன்றச் செயலாளர் வித்துவான் சி. ஆறுமுகம் தமது வரவேற்புரையில் மன்றத்தின் நோக்கங்களை எடுத்துக் கூறினர்.

இக்கவியரங்கத்தில் கவிஞர் மு. செல்லையா, பண்டிதர் வ. நடராசா, இசைப்புலவர் சி. செல்லத்துரை, ஆசிரியர் கே. கதிரவேற்பிள்ளை ஆகிய நான்கு கவிஞர்கள் பங்குபற்றினர். இசைப்புலவர் செல்லத்துரை தமது கவிதைகளை இசையமைப்புடன் பாடிக் கொடுத்தார்.

பண்டிதர் சோ. இளமுருகனர் மேலும் பேசியதாவது:-

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அழகுக் கலை, அறிவுக் கலை என இரண்டாக வகுக்கலாம். இசை, நடனம், ஓவியம், சிற்பம், காவியம் என்பன அழகுக் கலையிலும், விஞ்ஞானம், கணிதம் என்பன அறிவுக்கலையிலும் அடங்கும். உண்மைகளை அழகுக்கூடாகக்காண்பது அழகுக்கலை. உண்மைசபை உண்மையாகக் காண்பது அறிவுக்கலை. இப்பெற்றிய அழகுக் கலைகளுள்ளே தலைசிறந்தது இலக்கியம். புறவாழ்க்கையைச் சிறப்பிப்பது விஞ்ஞானம் என்றல் அகவாழ்க்கையைச் சிறப்பிப்பது இலக்கியமாகும். அல்லலுறும் மக்களுக்கு கணநேரத்துக்காயினும் கற்பனையுலகிலே ஆறுதலுண்டாக்கி சிவமாகி யிரண்டறக் கலந்து நுகரும் ஓர் இன்ப நிலையை இலக்கியம் தருகின்றது. இவ்வகையான இலக்கியத்தை அமைப்பவன் கவிஞன், புலவன் ஆவான். அழகு, நன்மை, உண்மை எனும் மூன்று தன்மைகளையும் விளைப்பது கவி, காவியம் எனப்படும் இதை ஆக்கும் கவிஞன் ஒரு சிறந்த சிற்பி. அவன் தொடர்பற்ற, பல வேறுவகைப்பட்ட பொருள்களை ஒன்றுபடுத்தி அழகு அமைத்துக்காட்டும் மாயா ஜால வித்தைக்காரனுகத் திகழ்கின்றன். கவிதை, ஆனந்த நிலையை உருவாக்கி, நிலையில்லாத உலகத்திலே நிலையான பொருளை நாடச் செய்யும் சிறப்பு வாய்ந்தது. இத்தகைய விழுமிய கவிதை செல்வத்தையுடையவராகிய கவிஞர்கள் உலகத்தில் மேலான செல்வர்கள். இவர்களைப் போற்றி வளர்த்தால் தான் எமது நாடு வளமுறும். கலை வளர்க்கும் இம்மன்றம் கலைக்குப் புத்துயிர் கொடுக்கச் செய்யும் முயற்சிகளில், இவ்வகையான கவியரங்கம் அமைத்தது பாராட்டுக்குரியது.

### இணைப்பு அவசியம்

இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கே. கைலாசபதி "இயக்கமும் இலக்கியமும்" என்ற பொருள் பற்றிப் பேசும்போது, "வெற்றுப் பாலைவனத்திலே பயிர் வளர்க்க முடியாது. அதனைப் பயன்படுத்திப் பயிர் செய்வது போல் சமூகத்தில் கலையைப் புகுத்த வேண்டுமாகில் கலைக்கும் சமூகத்துக்கும் நெருங்கிய இணைப்பு ஏற்படுத்த வேண்டும். அடிக்கடி கலையைப் பற்றிய நல்லெண்ணங்களை சமூகத்திலே விதைத்து மக்களிடையே இணைப்பு ஏற்படுத்த வேண்டும்" என்று கூறினர்.

வித்துவான் க. ந. வேலன் "கலையும் வாழ்வும்" என்ற பொருள்பற்றிப் பேசும்போது, வாழ்வு முழுவதையும் கலை மலரச் செய்ய வேண்டுமாகில் 'எனது, உனது' என்று சொல்லும் வேறுபாடற்ற நிலைக்கு வர வேண்டும் என்றார்.

திரு. சுப. இளங்கிரன் "கலை வளர்ப்போம்" எனும்பொருள் பற்றிப் பேசும்போது, பிறநாட்டிலிருந்து வரும் கலைஞர்கள், பத்திரிகைகள், நூல்களுக்கு மாத்திரம் நாம் மதிப்புக் கொடுத்தால் போதாது. நம் நாட்டுக்கவிஞர்களையும் பத்திரிகைகளையும் நாம் மதித்தால் தான் நமது நாட்டில் கலைவளரும் என்று குறிப்பிட்டார்.

கலையரசு கே. சொர்ணலிங்கம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை கூறினர். குமாரி லீலாம்பிகை கந்தையாயின் நடனவிருந்தும், லயஞான குபேரபூபதி வி. தெட்சணமூர்த்தி கோஷ்டியினரின் தவில் கச்சேரியும் நடைபெற்றன. குமாரி லீலாம்பிகைக்கும், திரு. தெட்சணமூர்த்திக்கும் அவர்கள் கலைத்திறனை பாராட்டி தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டது

வித்துவான் சி. ஆறுமுகம நன்கூறினர்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

திங்கள் 16-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-15 நிலையஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமச்ஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஆர். மூர்த்திஐயர் - புல்லாங்குழல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம், 9-30 குரல்வகை, 9-45 எஸ். சோமசுந்தரம் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇளச, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 காஞ்சிபுரம் எம். என். வேங்கடவரதன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மதுரை வி. மீனாட்சி - பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-15 இசைக்கோவை.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 இலக்கிய ஏடு, 7-40 திரைப்படஇசை, 8-00 "கீசகவதம்" (சென்னை அஞ்சல்), 9-15 மொழிபெயர்ப்பு இலக்கியம் - பேச்சு, 9-30 ஏழாவது ஆகாஷ்வாணி - ரேடியோ வர்ணனை.

## தேரில் தீப்பிடித்தது

கோடம்பாக்கம், ஏப். 15

ஸ்ரீ ராமசாமிகோவில் தேர் சாரங்கபாணி கிழக்கு வீதி வழியாக வந்துகொண்டிருக்கையில் மின் சாரக்கம்பியொன்று தட்டுப்பட்டதால் தீப்பிடித்தது. சில நிமிட நேரத்தில் தேர் மேல்பகுதியிலுள்ள சோடனைகளெல்லாம் தீக்கிரையாயின.

தேர் முற்றிலும் தீ பரவு முன்னர் பக்தர்களும் பொலிசாரும் தீயை அணைத்தனர்.

தேரிலிருந்த ராமர் - சீதை, லக்ஷ்மண திருவுருவங்களுக்கும் கோவில்குருக்களுக்கும் நாதஸ்வரவித்துவான்களுக்கும்தீயால் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

## 4 டகோபாக்கள் புதுப்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

நான்கு முக்கிய டகோபாக்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு டகோபா அரசாங்க புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவினலும் மற்றைய 3 டகோபாக்கள் இலாகாவின் உதவியுடன் புனருத்தாரண சங்கங்களாலும் திருத்தி அமைக்க ஏற்பாடாகியுள்ளது.

மிகிந்தலையிலுள்ள மகாசேயா என்னும் டகோபாவை புதைபொருள் ஆராய்ச்சி இலாகா திருத்தியமைக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. கதிர்காமத்திலுள்ள கிரி விகாரையை புனருத்தாரண சங்கம் திருத்தி அமைக்கும்.

புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவின் உதவியுடனும் மேற்பார்வையுடனும் பலடகோபாக்கள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

துட்ட கைமுனுவினல் கட்டப்பட்ட மிரிசாவிட்டியா டகோபா திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் சமீபத்தில் எடுக்கப்பட்டது.

## தீப்பெட்டி உற்பத்தி

### புதிய விதிகள்

கொழும்பு, சனி

தீப்பெட்டி தயாரிப்புத் தொழிலில் ஒரு சிலர் மட்டும் ஆதிக்கம் செலுத்துவதை நீக்குவதற்காக கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா புதிய சட்டமொன்றை இயற்ற நடவடிக்க எடுத்துள்ளார்.

புதிதாக இத்துறையில் இறங்குபவர்களுக்கு வசதியளிக்குமுகமாகவே மந்திரி இவ்வித நடவடிககை எடுத்துள்ளார்.

ஏற்கனவே இருக்கும் சட்டவிதிகள் மாற்றியமைக்கப்பட்டு புதிய விதிகள் புகுத்தப்படுவதால் தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் புதிதாக ஆரம்பிக்க எண்ணுபவர்களுக்கு இது நல்ல வாய்ப்பளிப்பதாகவிருக்குமென நம்பப்படுகிறது.

## உண்மைச் சைவன்

தெல்லிப்பழை, ஞாயிறு

கடவுளின் ஆணையை மேற்கொண்டு ஒழுகுதல் உண்மைச் சைவ சமயியின் கடமையாகும். கடவுளுக்கும் தனக்கும் உலகிற்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வழியில் ஒருவனுடைய வாழ்க்கை அறநெறியிற் செல்லும். அவனுடைய மனம், வாக்கு, கருமம் ஆகிய மூன்றும் தூய்மையுடையனவாக இருக்க வேண்டும்.

இவ்வாறு புலவர் திரு. ம. பார்வதிநாதசிவம் கடந்த வெள்ளிக் கிழமையிரவு வீணியவரை அம்மன் கோவிலில் உரை நிகழ்த்துகையிற் குறிப்பிட்டதாவது: மனம் தூய்மையுடையதாயிருந்தால் வீடுபேறு அடைதல் இலகுவானதாகும். ஒரு மனிதன் சமயமும் வாழ்வும் இரண்டறக் கலந்த நிலையிலேதான் தனது வாழ்க்கையைச் செம்மைப் படுத்த முடியும். சமய வாழ்வு வழ்பவனே பிறவியின் நோக்கத்தை உணர்ந்தவனாகிறான்.

புராணங்கள் நமது மூதாதையர் ஆக்கிஅளித்த பெருஞ் செல்வம். அவை நமக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன. நீதிபோதனைகளும் சமய நம்பிக்கைகளும் வளர்வதற்கு அவை உதவுகின்றன. இக்காலத்தவர் புராணங்களை எள்ளி நகையாடுகின்றனர். இது சமயத்தில் நம்பிக்கையில்லாதவர்களால் தான் உருக்கப் படுகிறது.

## நீர்வேலி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

### இன்று சம்பியன் ஆட்டம்

நீர்வேலி, சனி

நீர்வேலி யுனைட்டெட்ச் கழகம் நடத்திவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது. இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. பி. பிரிவில் சாம்பியனாக சுன்னாகம் றெக்கட்கோஷ்டி தெரிவு செய்யப்பட்டுள்ளது. 'ஏ' பிரிவில் உடுவில் ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் பல விளையாட்டுக்களகங்களைத் தோற்கடித்துள்ளது. எனினும் மற்றொரு கழகத்திடம் நடைபெறும்போட்டிமுடிவைத் தொடர்ந்தே சாம்பியன் இறுதியாட்டம் நிகழும். இருபிரிவுகளுக்குமிடையே சாம்பியன் போட்டி இம்மாதம் 15-ம் திகதி நடைபெறும்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது..




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லீமற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் டப்புக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றுல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது

## ஆச்ரமசாது நேதாஜியா?

கல்கத்தா, ஏப்ரல் 15

ஜல்பாய்குரி ஜில்லாவில் ஷோல்மாரி ஆச்ரமத்திலிருக்கும் மர்மசாது நேதாஜி சுபாஸ் சந்திரபோஸா?

ஆயிரக்கணக்கான மக்களின் மனதிலே இக்கேள்வி மேலோங்கி நிற்கிறது. அவர் நேதஜிதான் என்று அநேகர் நினைக்கின்றார்கள் சாதுவின் தோற்றம் நேதாஜியைப் போன்றிருப்பதாகவும் அவரது பேச்சுக்களும் சுபாஸ் போஸின் பேச்சுகளைப் போன்றே அநேகமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இது கட்டுக்கதை என்று அரசாங்க வட்டாரங்கள் நிராகரித்து விட்டபோதிலும் ஜால்பாய்குரியிலும் கூச் பெஹாரிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பலத்த வதந்தி ஒன்றைப் பரப்பி வருகின்றனர். சாது தமது அடையாளத்தை தெரிவித்து, மக்கள் மனதிலும் சந்தேகங்களைப் போக்குவதற்காக கூடிய விரைவில் வெளிவருவார் என்று இங்குள்ளவர்கள் கூறி வருகின்றனர்.

## ஆக்ரா சர்வகலாசாலையில் ஆங்கிலம் நீடிக்கும்

ஆக்ரா, ஏப்ரல் 15

சர்வகலாசாலையில் இப்போதைக்கு ஆங்கிலத்தை போதனை மொழியாக நீடிக்க ஆக்ரா சர்வகலாசாலையின் நிர்வாகக் கவுன்ஸில் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

சர்வகலாசாலையில் காந்திய தத்துவத்தை கற்பதை வளர்க்க காந்திஜி வாழ்க்கை சிந்தனை ஆகியவை பற்றி பலசொற்பொழிவுகளை நடத்த யூனியன் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்காக ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சிறந்த நூல்களை இந்தியில் மொழிபெயர்ப்பதற்கான செலவுக்காக யூனியன் கல்வி இலாகா சர்வகலாசாலைக்கு ரூ. 5000 அனுமதித்துள்ளதாகவும் தெரிகிறது.

## பிரான்சின் புதிய மந்திரிசபை

பாரிஸ். ஏப்ரல் 15

பிரான்சின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட திரு. பொம்பியூ தமது புதிய மந்திரி சபையை அமைத்து முடித்து விட்டதாய் அறிவிக்கப்பட்டது. முக்கிய பதவிகளில் முன்னைய மந்திரிகளே அமர்த்தப்பட்டுள்ளனர்.

# எல்லைத் தகராறுக்கு தீர்வு காண வினோபாஜி கூறும் ஆலோசனை

## இந்தியா, சீனு துருப்புகள் வாபஸாக வேண்டுமாம்

பாட்னு, ஏப். 15

எல்லைப்பிரச்சினைக்குத்தீர்வு காண முதல்நடவடிக்கையாக இந்தியாவும் சீனுவும்தகராறுக்கிடமான பிரதேசத்திலிருந்து தங்களது துருப்புகளைப் பரஸ்பரம் இசைவான தேதியொன்றில் வாபஸ்பெறவேண்டுமென்று ஆசாரியவினோபா பாவே அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

சர்வோதய தலைவர் தாதா தர்மாதிகாரி சமீபத்தில் அஸ்ஸாமில் வினோபாஜியைச் சந்தித்தபோது அவரிடம் மேற்கண்ட கருத்தை வினோபாஜி தெரிவித்தாரென அறியப்படுகிறது.

அதில இந்திய சர்வோதய மகாநாட்டில் தாதா தர்மாதிகாரி பேசுகையில் வினோபாஜியின் கருத்துக்களைத் தெரிவித்தார்

அரசியல் சர்வோதய ஊழியர்கள் பங்குகொள்வது அவர்கள் ஏகோபித்து தாங்களாகவே முடிவுசெய்யும் பட்சத்தில் தமக்கு ஆட்சேபமில்லை என வினோபாஜி குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாகா கலகக்காரர்களின் அழைப்பு இன்றி நாகா பிரதேசத்துக்கு விஜயம்செய்வதில் ஆசாரிய வினோபாவே அத்தனை அக்கறை காட்டவில்லை எனத் தெரிகிறது.

## சாது வேடத்தில் சுபாஷ்போஸ்?

கல்கத்தா, ஏப்ரல் 15

ஜால்பாய்குரி ஜில்லாவில் ஷோல்மாரி சூஸ்ரமத்திலிருக்கும் மர்ம சாது நேதாஜி சுபாஷ்சந்திரபோஸா?

ஆயிரக்கணக்கான மக்களின் மனதிலே இக்கேள்வி மேலோங்கி நிற்கிறது. அவர் நேதாஜிதான் என்று அநேகர் நினைக்கிறார்கள். சாதுவின் தோற்றம் நேதாஜியைப் போன்றிருப்பதாகவும் அவரது பேச்சுக்களும் சுபாஷ்போஸின் பேச்சுக்களைப் போன்றே அநேகமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இது வெறும் கட்டுக்கதை என்று அரசாங்க வட்டாரங்கள் நிராகரித்துவிட்ட போதிலும் ஜால்பாய்குரியிலும் கூச் பெஹாரிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பலத்த வதந்தி ஒன்றைப் பரப்பிவருகின்றனர். சாது தமது அடையாளத்தை தெரிவித்து மக்கள் மனதிலும் சந்தேகங்களைப் போக்குவதற்காக கூடிய விரைவில் வெளிவருவார் என்று இங்குள்ளவர்கள் கூறிவருகின்றனர்.

## பம்பாயில் "கல்கி" உருவப்படம் திரைநீக்கம்

பம்பாய், ஏப்ரல் 15

"காலம்சென்ற 'கல்கி' தமது சிறுகதைகள், நாவல்கள்மூலம் தமிழர்களின் இதயங்களைக் கவர்ந்துவிட்டார். 'கல்கி' ஒரு சிறந்த விமர்சகர்." என்று பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தால் காலஞ்சென்ற 'கல்கி' ஆர் கிருஷ்ணமூர்த்தியின் திருவுருவப்படமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில், மகாராஷ்டிரா கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாசா கூறினர்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. என். அண்ணுசாமி, கவர்னரை வரவேற்றார்.

## தீ விபத்தில் ரூ. 30,000 நஷ்டம்

மதுரை, ஏப்ரல் 15

இங்கிருந்து ஒன்றரைமைல் தூரத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தின் விளைவாக 30 கூரைவீடுகள் சேதமடைந்தன. அவற்றிலிருந்து உணவுத் தான்யங்களும், இதர பொருட்களும் நாசமடைந்தன. மொத்தம் ரூ. 30,000 நஷ்டம் ஏற்பட்டுள்ளன.

## கிராமத்தில் கொள்ளை

திருவையாறு, ஏப்ரல் 15

முகமூடியணிந்த கொள்ளைக் கோஷ்டியொன்று, இரவுவேளையில் மகாராஜபுரம் கிராமத்திலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து விலைமதிப்புள்ள பல பொருட்களைக் களவாடிச்சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

சுமார் பதினைந்துபேர் கொண்ட இந்த முகமூடிக் கொள்ளைக்கோஷ்டியினர், உள்நாட்டில் தயாரிக்கப்பட்டகைக் குண்டுகள் வைத்திருந்தனரென்றும், கோஷ்டியினரைப் பிடிப்பதில் ஈடுபட்ட சிலர் மீது அவர்கள் குண்டுகளை வீசினரென்றும், இச்சம்பவத்தில் சிலர் படுகாயமடைந்தனரென்றும் கூறப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவரின் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

## யாழ்ப்பாண மேயரும்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஷயங்கள் திட்டமிட்டு நடப்பதாகவும் தாங்கள் விரும்பிக் கோரும் வேலைகள் செய்யாது விடப்படுவதாகவும் தெரிவித்தார்கள்.

அங்கத்தவர்கள் குறிப்பிட்ட சில விஷயங்களை இங்கு வெளியிட விரும்புகின்றேன்.

கொழும்புத்துறை வட்டார மின்சார வேலைகள் தாமதிக்கப்பட்டன. உப்புக்கிளப் பிள்ளையார் கோவில் மின்சார வேலைகள் தாமதிக்கப்பட்டன. 4-ம் வட்டாரத்தில் அங்கத்தவரால் அவசியமெனக் கோரப்பட்ட 1500 ரூபா செலவு வரக்கூடிய வேலை செய்யப்படாது நிறுத்தி வைக்கப்பட்டு அந்த அங்கத்தவரின் சம்மதம் பெருது 4000 ரூபாவுக்கு மேற்பட்ட செலவு வரும் வேலை நடைபெறுகிறது. மேயரிடம் இது நியாயமற்ற செயல் என எடுத்துக் கூறினேன். அவர் இதற்கு அளித்த பதில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

## உலகவலம்

### கடைசிக்குறிப்பு

சீன-இந்திய எல்லைத் தகராறுபற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதை இந்தியா எதிர்க்கவில்லை என்றும், ஆனல் அதற்குமுன் ஆக்கிரமிப்பை சீனு காலிசெய்யவேண்டும் என்றும் இந்தியா கடைசியாக ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறது.

### மனித உரிமைக் கமிட்டி

மத சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கும் அம்சத்தைப்போல், மதநம்பிக்கையற்றவர்களுக்கும் பாதுகாப்பளிக்கும் அம்சத்தைச் சேர்த்துக்கொள்வதுபற்றி ஐ. நா. மனித உரிமைகள் கமிட்டி ஆலோசித்திருக்கிறது.

### கோபால்ரெட்டி

நவீன பாரதமொழிகளைப் பெருந்தொகையான இந்திய மக்கள் கற்கவேண்டுமென தகவல் மந்திரி திரு. கோபால் ரெட்டி கூறியிருக்கிருர்.

### தாகூர்

தாகூரின் நூற்ருண்டுவிழா முடிவடைவதை ஒட்டி சாந்திநிகேதனில் நேற்று இறுதிநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### டாக்டர் சுப்பராயன்

மகாராஷ்டிரா கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் சுப்பராயன், பம்பாய் புறப்பட்டார்.

### திரிபேதி நியமனம்

பார்லிமெண்டில் ஜனசங்கக் கட்சியின் தலைவராக திரு. யு. என். திரிவேதி நியமிக்கப்பட்டிருக்கிருர்.

### ஊரடங்கு

அலாபாத்தில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல்நாள் இரவு இங்கு கலகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### நியூகினி

மேற்கு நியூகினியின் 4 பிரதிநிதிகள் அடங்கிய கோஷ்டி ஒன்று ஹேக்சென்றிருக்கிறது. அமெரிக்க யோசனைபற்றி டச்சு அரசாங்கத்துடன் நியூகினி பிரதிநிதிகள்விவாதிப்பார்கள்.

### 16 பேர் கைது

வட ரொடீஷியாவில் பொலிசாருடன் ஏற்பட்ட ஒரு கைகலப்பின் விளைவாக 16 ஆபிரிக்கர்கள் கைதுசெய்யப்பட்டனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

கெப்பிட்டல் (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தனபுரி)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள, வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்


கூப்பன் இல: 5

### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..............................

கல்லூரி ..............................

எனது பெயர் ..............................

விலாசம் ..............................

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.